Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

பொதுசன நூலகம்

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-9 21-02-2005 திங்கட்கிழமை ஓசை -03



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11251)

# 3 ஆண்டுகள் நிறைவு செய்யும் ஒப்பந்தம்

# முறிவடையும் சாத்தியமே அதிகமாகும்

## கூட்டமைப்பு பா. உ. கஜேந்திரன்

(கொழும்பு)

**மூன்றாண்டுகளை நிறைவு செய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினூடான செயற்பாடுகள் திருப்தியற்ற நிலையில் இருப்பதால் இவ் ஒப்பந்தம் முறிவடையும் சாத்தியமே அதிகமாக இருக்கிறதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பா.உ. கஜேந்திரன் கூறியுள்ளார்.**

இது தொடர்பாக கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் கஜேந்திரன் கருத்துத் தெரி விக்கையில்,

இவ்ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறிலங்கா அரசு மேற்கொள்ள வேண்டிய பல செயற்திட்டங்களை செயற்படுத்தாதுள்ளது. குறிப்பாக, மாவட்ட மட்டத்தில் இரு தரப்பினருக்குமிடையில் இடம்பெறும் உபகுழுக் கூட்டத்தில் கூட புலிகளுக்கு இழுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை அரசியல்துறை அலுவலகம் முன் சந்தேகத்துக்கிடமானோர் நடமாட்டம்

வாழைச்சேனைப் பிரதேசத்திலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் நள்ளிரவு சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டம் காணப்பட்டதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூவர் ஆயுதங்களுடன் உந்துருளியில் அலுவலகச் சுற்றாடலில் நடமாடுவது விடுதலைப்புலிகளினால் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக உடனடியாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது. போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் வாழைச் சேனைப் பொலிசாருக்கு இது பற்றித் தகவல் கொடுத்ததையடுத்து பொலிசார் அந்த இடத்திற்குச் சென்று நிலைமையைக் கண்காணித்தனர்.

## நோர்வே விசேட தூதுவர் நாளை வன்னிக்கு வருகை

நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் அவர்கள் நாளை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.இன்று ஒரு வாரகால விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்குவரும் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் அவர்கள் நாளை 10 மணிக்கு கிளிநொச்சிக்கு வருகை தந்து, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்துக கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ச)

### வவுனியா கொக்குவெளி முகாமில்

## வெடிமருந்தை உட்கொண்ட சிப்பாய்கள் 18 பேர் மருத்துவமனையில் அனுமதி

வவுனியா கொக்குவெளி சிறிலங்கா இராணுவ கமாண்டோ படை அணியைச் சேர்ந்த 18 சிப்பாய்கள் திடீரென நோயுற்ற நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இராணுவப் பயிற்சியின்போது மயக்கமுற்ற இவர்கள் இரத்த வாந்தி எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களுக்குப் பயிற்சி வழங்கிய இராணுவ அதிகாரியொருவர் வழங்கிய தண்டனையின்போது சி-4 வெடிமருந்தை சுவாசிக்குமாறு அல்லது உண்ணுமாறு கட்டளை பிறப்பித்ததாகவும், குறிப்பிட்ட சிப்பாய்கள் மறுத்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

24.11.2004 அன்று வந்தாறு மூலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுடப்பட்டு நாட்டுப்பற்றாளர் இருவர் வீரச் சாவடைந்துள்ளனர். நாட்டுப்பற்றாளர்-தயாபரன் (சண்முகம்-தயாபரன், சந்தை வீதி,வந்தாறுமூலை)

நாட்டுப்பற்றாளர்-மனோகரன் (சம்புநாதன்-மனோகரன் பாடசாலை வீதி வந்தாறுமூலை) ஆகியோரே வீரச் சாவடைந்தவர்களாவார். இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## அமெரிக்க முன்னாள் சனாதிபதிகள் கொழும்பு வந்தடைந்தனர்



(கொழும்பு)

சுனாமித் தாக்கத்திற்குள்ளான ஆசிய நாடுகளுக்கான தமது சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ், பில் கிளின்டன் ஆகியோர் நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கான தமது விஜயத்தை முடித்துக் கொண்டு, நேற்றுப் பிற்பகல் மூன்று நாற்பத்திரண்டு மணியளவில் யூ.எஸ். எண்பதாயிரத்து இரண்டு என்ற விசேட விமானத்தின் மூலம் இலங்கைக்கு வந்தனர்.

இவர்களை இலங்கை வெளிவிவகார அமைச்சர், ஊடகத்துறை அமைச்சர், பிரதி வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் உட்பட பலர் வரவேற்றனர்.

முதலில் விசேட அதிதிகளுக்கான புத்தகத்தில் இவர்கள் இருவரும் கையொப்பமிட்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பேருந்து தடம்புரண்டு பத்துப் பயணிகள் காயம்

(மன்னார்)

மன்னாரில் பேருந்து தடம் புரண்டதில் பத்துப் பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், தள்ளாடி பிரதான வீதியிலுள்ள இராணுவ பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினமிரவு 11.00 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட தனியார் பேருந்து நேற்றுக் காலை 6.00 மணியளவில் தடம் புரண்டது. சாரதியின் நித்திரை காரணமாகவே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

### கையடக்க தொலைபேசிகள் தடுப்பு

சட்டவிரோதமாக இலங்கைக்குள் எடுத்துவர முயற்சிக்கப்பட்டதாகத்தெரிவித்துசெய்ம்மதித் தொழில்நுட்பத்துடன் கூடியஒளிப்படக்கையடக்கத் தொலைபேசிகள் சில கட்டுநாயக்க விமானத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சிலர் இவற்றினை எடுத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

### இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூடு

## ராணுவத்துடன் இயங்கும் குழுவில் ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடியிலும், பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தவிலும் 24 மணித்தியாலத்தில் இடம்பெற்ற இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிறிலங்கா இராணுவத்திற்குத் துணையாக இயங்கும் குழுவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரியவருகையில், நேற்று முன்தினமிரவு ஓட்டமாவடியில் இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்தவர் கிரானைச் சேர்ந்த வடிவேல் ரவிச்சந்திரன் எனவும், இவர், கொழும்பிற்குச் செல்வதற்காக பேருந்து நிலையம் ஒன்றில் நின்றவேளை, இனம்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது..நேற்று மதியம் வெலிக்கந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற இரண்டாவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் வில்லியசிங் கம் மனோகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்தவர் திவாகர் எனப்படும் விநாயகமூர்த்தி ஜெகநாதன் எனக் கூறப்பட் டுள்ளது. கரபொலவில் இருந்து முத்துக்கல் நோக்கி இருவரும் உந்துருளியில் சென்றவேளை, காட்டுப் பகுதியில் இவர்கள் மீது இனம்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

**வரிவிளம்பரம்**

**தவறிவிட்டது**

EP.GL0423 என்னும் NO தகடு புதுக்குடியிருப்பில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மதி உணவகத் தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங் கப்படும். (5693)

**பிற்போடப்பட்டுள்ளது**

22.02.2005 செவ்வாய்கிழமை நடைபெறவிருந்த கிளி/முருகா னந்த மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தால் 25.02.2005 ஆம் திகதிக்கு பிற்போடப்பட் டுள்ளது. (5738)

**இறப்பர் முத்திரை**

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ள வும், போட்டோகொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உட னுக்குடன் செய்து கொள்ளவும், பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி. T.P 021.2285750. (சி.11235)

**வீடு விற்பனைக்கு**

பரந்தன்-முல்லை வீதியில் புதுக்குடியிருப்பிலிருந்து 7 KM தொலைவில், தேவிபுரம் சந்திக் கண்மையில் ஒரு ஏக்கர் காணி யில் கட்டிக் கிணற்றுடன் கூடிய 3 அறை வீடொன்று விற்பனைக் குள்ளது. தொடர்புகளுக்கு:- 2227586. (5737)

**உழவு இயந்திரம் விற்பனைக்கு**

உழவுக்கு பாவிக்காத 135 மசி பேக்குசன் 37-9271, புதிய பெட்டி யுடன் விற்பனைக்குண்டு. தொடர் புகளுக்கு:-ந.திருச்செல்வம், 3 ஆம் வட்டாரம், ஐயனார் கோவிலடி, முள்ளிவளை, முல்லைத் தீவு. (5733)

**இல்ல மெய்வல்லுநர் போட்டி**

பூநகரி சிறிவிக்கினேஸ்வரா வித்தியாலய இல்ல விளையாட் டுப் போட்டிஇம்மாதம் 15 ஆம் திகதி 1.00மணிக்கு ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வான மங்கல விளக்கை பிரதிக்கல்விப் பணிப் பாளர் மா.பத்மநாதனும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப் பிள்ளை ஏற்றினார். தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியேற்றல் நிகழ்வு இடம் பெற்றது. ஒலிம்பிக் சுடரை பிரதிக்கல்விப் பணிப் பாளர் பத்மநாதன் ஏற்றி னார்.தொடர்ந்து விளையாட்டுப் போட்டி இடம் பெற்றது.வீர் வீராங் கனைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (35)

# மட்டு-அம்பாறை முன்பள்ளி மாணவர்களுக்கு த.பு.கழகம் போசாக்கு உணவு வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்திலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்கு மிக்க உணவு வகைகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் விளை யாட்டு உபகரணங்கள் என்பன தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின ரால் வழங்கப்பெற்று வருகின்றது. சுனாமிப் பேரலை அனர்த்தத் தினால் பாதிக்கப்பட்டுள்ள முன் பள்ளி மாணவர்களின் போசாக்குக் குறைபாடுகளை நிவர்த்தி செய் யும் வகையிலும், அவர்களது அறிவுத்திறனை விருத்திசெய்யும் வகையில் மேற்படி நடவடிக்கை யினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பாடசாலை மாணவர்கள் பயணிப்பதில் சிரமம்

(உடையார்கட்டு)

தேராவில் தொடக்கம் புதுக் குடியிருப்பு வரையான பகுதிகளி லுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள்(பரந்தன் - முல்லைவீதி) பாடசாலை செல் வதற்கான போக்குவரவில் ஈடுபடு வதில் தொடர்ந்தும் நெருக் கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திலும், பாடசாலை முடிவுறும் நேரத்தின் போதும் இப்பகுதிக ளூடாக பாடசாலைப் பணி பேருந்துசேவை இடம்பெறுவ தில்லை. இதனால் பாடசாலை மாணவர்கள், பயணிகள் பேருந்து களிலேயே தமது பாடசாலைப் பயணிப்பை மேற்கொள்கின்றனர்

இந்த நேரங்களில் இப்பாதை யூடாகவரும் ஓரிரு பயணிகள் பேருந்துகளும் மிகவும் அதிக மான பயணிகளுடனேயே சேவையில் ஈடுபடுகின்றன. இத னால் பாடசாலை மாணவர்கள் பெரும் நெருக்கடியின் மத்தியில் சோர்வுடன் அதில் பயணிப்ப துடன் அவை ஏற்றத் தவறும் பட்சத்தில் உரிய நேரத்திற்குப் பாடசாலை சென்று கல்வியைத் தொடர முடியாத அவல நிலை ஏற்படுகின்றது.(19)

### -தேசிய கல்வி நிறுவகத்தின்-

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பம் கோரல்

(வவுனியா செய்தியாளர்)

தேசியக் கல்வி நிறுவகம் நடாத்தும் பட்டப்பின் கல்வி டிப் ளோமா பாடநெறிக்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2005-2006 கல்வி ஆண்டுக் கான இப்பாடநெறியைப் பின்பற்ற விரும்புவர்கள் பட்டதாரியாகவும், அரசாங்க அல்லது அங்கீகரிக்கப் பட்ட அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பாடசாலை யின் ஆசிரியராக அல்லது அதி பராக இருக்க வேண்டும் அல்லது ஆசிரிய ஆலோசகராக, ஆசிரியர் கல்வியாளராக,விரிவுரையாளராக இருத்தல் வேண்டும். அல்லது பட்டதாரியாகவும் தேசிய கல்வி நிறுவகத்தின் ஆளணியில் ஓர் அதிகாரியாக அல்லது கல்வி அமைச்சின் அதிகாரியாக அல் லது மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரியாக அல்லது அரசாங் கத் திணைக்களம் ஒன்றின், கூட்டுத்தாபனம் ஒன்றின், நியதிச் சபை ஒன்றின் அதிகாரியாக இருப்பதுடன் 28.03.2005 அன்று 50 வயதுக்குக் குறைந்தவராகவும் இருக்க வேண்டும்.

இப்பாடநெறிக்கான விண் ணப்பப் படிவங்களை விநியோ கிக்கும் இறுதித்திகதி 07.03.2005 எனவும் விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித்திகதி 28.03.2005 எனவும் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஜெ.டபிள்யு விக்கிரமசிங்க அறி வித்துள்ளார். (10)

**கிளி/தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்-கிளிநொச்சி மாவட்டம்**

**பதவி வெற்றிடம்**

கிளி/தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் பின்வரும் பதவி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆங்கில விரிவுரையாளர்கள்:**-பகுதி நேரம்

**தகைமை:**-அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் துறைசார்ந்த பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

துறைசார்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், மூன்று வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட டிப்ளோமா பட்டமும், இரண்டு வருட கற்பித்தல் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமையுடையோர் எதிர்வரும் 01.03.2005 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

முகவரி:-
அதிபர், தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி.11446)

**புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்**

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக்கல்வி நிறுவனம் வன்னி மாணவர்களின் நலன் கருதி சர்வதேச தரத்திலான சான்றிதழைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் பின்வரும் கற்கை நெறிகளுக்கு புதிய மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.மரவேலைப்பயிற்சி நெறி(Wood Work) -6 மாதம்
2.மேசன் பயிற்சி நெறி (Masonry) -6 மாதம்
3.நீர்க்குழாய் பொருத்தல் பயிற்சி நெறி (Plumbing) -6 மாதம்
4.மின்னொட்டு பயிற்சி நெறி (Welding) -6 மாதம்

கல்வித்தகைமை:-7 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
வயது:-18 வயதுக்கு மேல்
5.தேசிய சான்றிதழுக்கான ஆங்கிலக் கற்கை நெறி (N.C.E)-1 வருடம்
கல்வித் தகைமை:-க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
தகைமையுடையோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 01.03.2005 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.

முகவரி:-
அதிபர், தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி.11445)

**தமிழர் புனர்வாழ்வுக் கழக முகாமைத்துவக் கல்லூரியில் 20.02.2005 இல் நடைபெற்ற நேர்முகத் தேர்வின் பிரகாரம் AAT கற்கை நெறியை பயிலுவதற்குத் தெரிவானோர் பெயர் விபரம்**

பெயர்

| | |
|---|---|
| 1.மா.பிறேம்குமார் | 38.சு.பிரதீப் |
| 2.சி.விக்னேஸ்வரன் | 39.கு.நகுலன் |
| 3.ரோகினி.சி | 40.வ.ஸ்ரீகுமார் |
| 4.ம.கிருஸ்ணவதனி | 41.க.ஜெயகாந்தி |
| 5.ந.நவரதம் | 42.ப.ஜசிந்தா |
| 6.அ.திவாகரன் | 43.ஆ.நந்தகுமார் |
| 7.கி.ஸ்டீபன் | 44.சி.செந்தூரன் |
| 8.உ.ஜஷாந்தன் | 45.பிரதீபா.தி |
| 9.கௌரிப்பிரகாஸ்.S | 46.து.ஜேய்கிறிம்சன் |
| 10.நா.மனோராஜ் | 47.ஜெனனி.க |
| 11.அசோக்குமார்.S | 48.க.ஜெயராஜ் |
| 12.சுபதர்சினி.S | 49.ந.சுபாஜினி |
| 13.அனுஷா.ச | 50.வாசுகி.ஆ |
| 14தர்சினி.கோ | 51.இ.ஜெயந்தினி |
| 15.சி.விக்னேஸ்வரன் | 52.கலைச்செல்வி.சி |
| 16.சி.சாந்தகுமார் | 53.அனுசுயா.R |
| 17.க.குகேஸ்வரன் | 54.சா.மோகன்ராஜ் |
| 18.M.ரமணேந்திரன் | 55.புவனேஸ்வரி.கு |
| 19.ப.கஜேந்திரன் | 56.மேரிஸ்டனிலா.ஸ் |
| 20.ரதிதேவி.தி | 57.பவானி.ரா |
| 21.கு.சுரேந்திரன் | 58.க.அரசரட்ணம் |
| 22.அனுஷா.செ | 59.சுரேகா.இ |
| 23.மதிவதனி.ச | 60.சோபனா.ம |
| 24.சிந்துஜா.த | 61.கி.பிரதீபன் |
| 25.நிசாரூபி.செ | 62.சி.பகீரதன் |
| 26.சிவதர்சினி.சி | 63.ஆ.மோகனசிங்கம் |
| 27.ஜெயந்தினி.தி | 64.நிவேதரூபினி.N |
| 28.நர்மதா.க | 65.வீ.கோபாலசிங்கம் |
| 29.கல்பனா.கி | 66.அஜந்தா.அ |
| 30.விஜயநிர்மலா.க | 67.அருட்செல்வி.வீ |
| 31.ஜெயவாணி.த | 68.சுஜாதா.கு |
| 32.பொ.பத்மநாதன் | 69.திருமகள்.ச |
| 33.ரா.சத்தியரூபன் | 70.மங்கையகரசி.S |
| 34.சுதர்ஜினி.கா | 71.சாலினி.A |
| 35.உ.ஜெயக்குமார் | 72.மைதிலி.செ |
| 36.க.செல்வபாலன் | 73.நிலாந்தினி.R |
| 37.ஜெ.உதயகுமார். | 74.சந்திரகாந்.S |

மேற்குறிப்பிடப்பட்ட மாணவர்கள் 24.02.2005 இற்கு முன னதாக பின்வரும் ஆவணங்களுடன் முகாமைத்துவக் கல் லூரி, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெயரும், தேசிய அடையாள அட்டை இலக்கமும் புறப் பக்கத்தில் எழுதப்பட்ட கடவுச்சீட்டுக்கு உபயோகிக்கும் அள விலான (2",2 1/4") புகைப்படங்கள் இரண்டு.

கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி.

நிர்வாகம்,
முகாமைத்துவக் கல்லூரி,
கிளிநொச்சி.

(சி.11347)

# ரபீக் கொலை பற்றி விசாரிக்க ஐ.நா குழு பெய்ருட் பயணம்

கடந்த திங்கட்கிழமை லெபனானின் பெய்ருட் நகரில் நடந்த கார்க்குண்டு வெடிப்பில் அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரி உட்பட 15 பேர் பலியானார்கள். இந்த படுகொலைக்கு சிரியா பின்னணியாக இருக்கலாம் என்றும் புகார் கூறப்பட்டது. லெபனானின் உள்நாட்டுக் கலவரம் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளன.

ரபீக் கொல்லப்பட்டது எப்படி என்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபை ஒரு குழுவை நியமித்துள்ளது. இந்தக் குழுவுக்கு அயர்லாந்து பொலிஸ் துணை கமிஷனர் பீட்டர் பீட்ஸ் ஜெரால் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த வாரம் இந்தக் குழு பெய்ருட் செல்கிறது.

# இரு பத்திரிகையாளரையும் விடுவிக்க இந்தோனேஷிய சனாதிபதி கோரிக்கை

(ஜகார்த்தா)

ஈராக்கில் தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ள இந்தோனேஷிய பத்திரிகையாளர்கள் இருவரையும் விடுவிக்குமாறு இந்தோனேஷிய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த இரண்டு பத்திரிகையாளர்கள் ஈராக்கிலுள்ள டாமாதி நகரில் கடந்த 18ஆம் திகதி கடத்தப்பட்டனர். அவர்களை தாம் பிடித்துவைத்துள்ளதாக முகாதிதீன் என்ற தீவிரவாத அமைப்பு கடந்த 18ஆம் திகதி அறிவித்ததுடன், அதற்கான ஒளி நாடாவையும் வெளியிட்டுள்ளது இதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர்கள் இருவரையும் பாதுகாப்பாக விடுவிக்குமாறு இந்தோனேஷிய சனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.



பாக்தாத்தின் கதிமியாப் பகுதியில் இமான் குனசனின் நினைவு நாளன்று சியான முஸ்லிம் ஆதரவாளர் ஒருவர் தனது தலையில் வாளால் வெட்டித் தனது துக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

# எதிர்காலத்தில் றோபோக்களின் செயற்பாடு அமெ. இராணுவத்தில் முக்கிய இடம் பிடிக்கும்

"-நியுயோர்க் ரைம்ஸ்" தகவல்

(வோஷிங்டன்)

**அமெரிக்க இராணுவத்தில் றோபோக்களின் செயற்பாடு எதிர்காலத்தில் முக்கிய இடம்பெறும் என "நியுயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.**

இராணுவ வீரர்களைப் போலவே இந்த றோபோக்களும் போர்களில் இடம்பெற்று எதிரிகளைக் கண்டறிந்து அவர்களை அழிக்கும் பணியை மேற்கொள்ளும்.

இது குறித்து "நியுயோர்க்ரைம்ஸ்" நாளிதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- 21 ஆம் நூற்றாண்டில் அமெரிக்க இராணுவத்தில் வீரர்களை விட றோபோக்களின் பணியே பிரதானமாக இருக்கும் போர்களில் ரிமோல்ட் கொண்ட்ரோல் கருவி மூலம் இவை இயக்கப்படும். கடந்த 30 ஆண்டு கால ஆய்வின் பயனாக இந்த றோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இராணுவ வீரர்களைப் போல தன்னிச்சையாக இவை செயற்பட இன்னும் 30 ஆண்டுகள் ஆகும் எனக் கருதப்படுகிறது. இதற்கான ஆய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எதிரிகளின் இலக்குகளைக் குறி தவறாமல் தாக்குவதில் இவை வல்லமை பெற்றவை. நிமிடத்துக்கு 1000 ரவைகள் சுடத்தக்கவை. ஈராக்கில் தீவிரவாதிகள் மறைத்து வைக்கும் வெடிகுண்டுகளைக் கண்டறிய றோபோக்கள் பயன்படுத்தப்படும் இதற்காக அமெரிக்க இராணுவத்திற்கு இரண்டாயிரம் றோபோக்கள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.




சனி தீவிரவாத படையினரைத்தேடும் பணியில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் பொலிசார்

# போர்த்துக்கல்லில் 3 வருடங்களில் நான்காவது தேர்தல் நடைபெறுகிறது

போர்த்துக்கல்லில் 230 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நேற்றைய தினம் நடைபெற்றது. இத்தேர்தலில் எதிர்க்கட்சியான சோசலிசக் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறுமெனக் கருத்து கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை ஆட்சி செய்த மத்திய வலது சாரிக் கூட்டணிக்கு செல்வாக்கு குறைந்து விட்டதென கருதியே சனாதிபதி சம்பாயோ தேர்தலை முன் கூட்டியே நடத்துவதற்குத் தீர்மானித்திருந்தார். நேற்றைய தினம் நடைபெற்ற வாக்களிப்பு மூலம் மூன்று வருட காலத்திற்குள் நான்காவது அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் பூரிகங்கா ஆற்றில் 200 பயணிகளுடன் படகு மூழ்கியது

## -முப்பத்தேழு சடலங்கள் மீட்பு

(டாக்கா)

பங்களாதேஷின் நாராங் மாவட்டத்திலுள்ள பூரி கங்கா ஆற்றில் இருநூறு பயணிகளுடன் சென்று கொண்டிருந்த படகு ஒன்று மற்றொரு படகுடன் மோதியதைத் தொடர்ந்து படகு மூழ்கியது.

புயற்காற்று வீசியதன் காரணமாகவே இவ் விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 37 சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகும். ஏனையோர் மூழ்கிய படகினுள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து டாக்காவிலிருந்து மீட்புப் பணிகளுக்காக நீச்சல் வீரர்களும், அதி நவீன சாதனங்களும் சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்தோனேசியாவின் பண்டா ஆசேப் பகுதியில் சுனாமி பேரலைத் தாக்கத்திற்குள்ளான தனது காணியிலிருந்த வீடு அழிக்கப்பட்ட நிலையில் கிணற்றில் உடுப்புக்களை சலவையிடும் பெண்

# பாக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல் பதினேழு பேர் பலி; 23 பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக் நாட்டின் தலைநகர் பாக்தாத்தில் ஷியா முஸ்லிம்களுக்கான மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டதோடு, 23 பேர் காயமடைந்துள்ளனர்.

தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒருவர் உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்து இத்தாக்குதலை நடத்தியுள்ளார். இதில் மசூதியின் இமாம் ஷேக் மலேக் கினானியும் காயமடைந்தார்.

தேர்தலில் ஷியா முஸ்லிம் கட்சி வெற்றி பெற்றதால் ஆத்திரமடைந்த சன்னி முஸ்லிம்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



இரண்டு கொறியாக்களுக்குமிடையே இராணுவ சூனியப் பிரதேசத்தின் வடகொரியாவிற்கு நெருக்கமான பகுதியில் வடகொரியத் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

## 500 கைதிகள் கடத்தல்

கெயிட்டியில் பிரதான சிறைச்சாலைக்குள் திடீரென பிரவேசித்த ஆயுததாரிகள் அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதம மந்திரி மொர்ரியுவையும் மற்றும் பலரையும் கடத்திச் சென்றுள்ளனர். ஏறக்குறைய 500 கைதிகள் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக கெயிட்டிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை விரைவில் முன்வைக்குக

## –நேபாள மன்னரிடம் அமெரிக்கா கோரிக்கை

(வோஷிங்டன்)

நேபாளத்தில் மீண்டும் சனநாயகத்தை ஏற்படுத்துவதற்கும், கிளர்ச்சிக்காரர்களை எதிர் கொள்வதற்கும் உரிய திட்டமொன்றை மிக வேகமாக முன்வைக்குமாறு அமெரிக்கா, மன்னர் ஞானேந்திராவைக் கேட்டுக் கொண்டுள்ளது.

நேபாளத்திற்கான அமெரிக்க தூதுவர் ஜேம்ஸ் மெனியார்ட்டி இதனை வோஷிங்டனில் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் கடந்த வாரங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் மன்னரும் அவரது அரசாங்கமும் மீண்டும் சனநாயகத்தை ஏற்படுத்துவதற்கும், மாவோ கிளர்ச்சிக் காரர்களை எதிர் கொள்ளவும் 100 நாட்களுக்குள் திட்டமொன்றை அறிவிக்கப்போவதாக தெரிவித்திருந்ததை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# அளம்பில், செம்மலை, நாயாற்று மக்களை குடியமர்த்துவது தொடர்பாகக் கலந்துரையாடல்

(முல்லை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட அளம்பில், செம்மலை, நாயாற்று மக்களை குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதனன்று அளம்பில் றோ.க பாட சாலையில் கடற்புலிகளின் போராளி அரவிந்தன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் பாடசாலைகளில் இரண்டு மாத காலமாகத் தங்கியுள்ள மக்களைத் தற்காலிக வீடுகளில் மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவும், நிரந்தர வீடுகள் அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் கிராம அலுவலர்கள், கிராம மக்கள், பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (20)

# பெற்றோல் விநியோகத்தைச் சீர்செய்க!

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றோல் விநியோகத்தில் ஏற்பட்டுவரும் சீரின்மையால் மக்கள் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

நெடுங்கேணி பிரதேசசபைக்குட்பட்ட எட்டுக்கு மேற்பட்ட கிராமங்களின் மக்கள் மேற்படி சங்கத்திலேயே பெற்றோலைப் பெறவேண்டிய தேவை உள்ளது. இச்சங்கத்தில் மட்டும்தான் பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறிருக்கும் சூழலில் கடந்த சில மாதங்களாக மக்களுக்கு இரண்டு லீற்றர் பெற்றோல் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பெற்றோல் முடிவடைந்தால் நீண்ட நாட்களின் பின்பே அச்சங்கம் பெற்றோலைக் கொள்வனவு செய்கின்றது.

மேற்படி நடவடிக்கையினால் எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நீண்ட தூரங்களுக்கு அப்பாலுள்ள எரிபொருள் நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (கு)

## பாம்புக்கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கையில் அதிகரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணி சுற்றயல்கூறு வைத்தியசாலையில் பாம்புக்கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரித்து வருகின் றது.

2005 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாத நடுப்பகுதி வரை மட்டும் பதினைந்திற்கும் மேற் பட்டோர் பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (கு)

# சுனாமியால் பாதிப்புற்ற நிர்மாணப் பணிகள் அனைத்தும் மீளக் கட்டியெழுப்பப்படும்

## முல்லை. நிகொட் திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லை)

**சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிகொட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைத் திட்டங்கள் மீண்டும் நல்ல முறையில் முன்னெடுக்கப்படும் என நிகொட்திட்ட முல்லை மாவட்டப் பணிப்பாளர் ரகுநாதப் பிள்ளை தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவில் ஒன்பது மீனவர் ஓய்வு விடுதிகளையும்பல பாடசாலைக் கட்டடங்களையும் சமாதான சூழலுக்கு பின்னர் அமைத்துக் கொடுத்தோம். சுனாமியினால் ஏழு மீனவர் ஓய்வு விடுதிகள் முற்று முழுதாக அழிந்துள் ளன. பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகள் முற்று முழுதாகவும், வேறுசில பாடசாலைகள் நாம் அமைத்துக் கொடுத்ததில் பகுதி அழிவாகவும் உள்ளன. இவையனைத்தும் மீளவும் இரண்டு மடங்காக அமைத்துக் கொடுக்கவுள்ளோம். அத்துடன் நிகொட்டினால் அமைத்துக் கொடுத்த வீதிகள், பாலங்கள் என்பனவும் மழை வெள்ளத்தினாலும் அழிந்துள்ளன. அவை அனைத்தையும் திரும்பவும் புனரமைக்கவுள்ளோம்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவியாக பத்து நீர் கொள்கலனும் அதனுடன் கூடிய நீர் இறைக்கும் இயந்திரம் பத்து,அதனை இழுத்துச் செல்வதற்காக பத்து உழவு இயந்திரமும்,எட்டு கே.வி வலுவுள்ள மின்பிறப்பாக்கி இரண்டும் முல்லைத்தீவு மாவட்டஅரச அதிபரிடம் வழங்கியுள்ளதாகவும் ,

ஒரு மின்பிறப்பாக்கி முள்ளியவளை மத்திய மருந்தகத்திற்கும், மற்றையது முல்லை மாவட்ட சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனைக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (20)

## பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு

(புதுக்குடியிருப்பு)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான 2000 ஆம் ஆண்டு சனவரி பெப்ரவரி மாதங்களுக்கான கொடுப்பனவு மேற்படி பிரிவில் உள்ள நெடுங்கேணி, முத்து ஐயன்கட்டு, ஒட்டுசுட்டான், கரிப்பட்ட முறிப்பு,திருமுறிகண்டி ஆகிய தபாலகங்களில் கடந்த 15.02.2005 தொடக்கம் 25.02.2005 வரையான காலப்பகுதியில் வழங்கப்படுகிறது.

இதனை உரிய காலத்திற்குள் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (08)

## தாமதம் ஏன்?

(கண்டாவளை)

பரந்தனில் உள்ள பேருந்து நிலையத்தில் தரித்துச் செல்லும் பயணிகளின் நலன் கருதி இப்பகுதியில் சோஆ நிறுவனத்தின் நிதி உதவியுடன் கரைச்சிப் பிரதேச சபையினரின் ஒழுங்குபடுத்தலில் பரந்தன் சனசமூக நிலையத்தினர் இரண்டு சிறுநீர்க் கழிப்ப றைகளையும், இரு மலசல கூடங்களையும் அமைத்துள்ளனர்.. எனினும் இக்கழிப்பறைகளில் நீர் வசதிகள் பிரதேச சபையினரால் ஒழுங்குபடுத்தப்படாமல் கடந்த ஒரு மாத காலமாக தாமதமாகி வருவதால் பிரயாணிக ளின் பாவனைக்கு இன்னமும் திறந்து விடப்படவில்லை. இதனால் பிரயாணிகள் தொடர்ந்தும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர். (14)

## யானைகள் நடமாட்டம் அதிகரிப்பு

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம்-ஒட்டுசுட்டானுக்கும் இடையில் யானைகளின் நடமாட்டம் அதிகமாகியுள்ளது.

மாங்குளத்திலிருந்து 11 ஆம்,12 ஆம் மைல்களிற்கிடையில் மாலை 7.00 மணியளவில் யானைகள் பிரதான வீதிகளிற்கு அருகில் நிற்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே இவ்வீதியால் உந்துருளி,ஈருருளிகளில் செல்வோர் அவதானமாகச் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர் (05)

# காலபோக நெற்செய்கை விளைச்சல் நோய்ப்பீடைத் தாக்கத்தினால் வீழ்ச்சி

( கண்டாவளை )

கண்டாவளைப் பிரதேசத்தில் 2004-2005 காலபோக நெற்செய்கை நோய்ப்பீடைத் தாக்கத்தால் பெருமளவு உற்பத்தி விளைச்சல் வீழ்ச்சி அடைந்துள்ளது.

கபிலநிறத் தத்தி சந்துகுத்தி பூச்சிகளின் தாக்கத்தாலேயே நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நோய்ப் பீடைத் தாக்கத்தால் பல விவசாயிகளின் நெல் வயல்கள் 60 வீதத்திற்கு மேலாக வெள்ளைக்கதிராக மாறியுள்ளது. இதன்காரணமாக பெருமளவு பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நோய்ப் பிடைத்தாக்கத்திற்கு கடந்த காலங்கள் போலன்றி சிபாரிசு செய்யப்பட்ட கிருமிநாசினிகளை விவசாயிகள் விசிறிய போதிலும் இந்நோய்ப் பீடைத்தாக்கத்திலிருந்து நெற்செய்கையைக் காப்பாற்ற முடியவில்லை என இப்பிரதேச விவசாயிகள் கவலையடைந்துள்ளதுடன் பெருமளவு பொருளாதார நஷ்டத்திற்கும் உள்ளாகியுள்ளனர். (14)

## மாதாந்தக் கலந்துரையாடல்கள் பிற்போடல்

கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடை பெறும் மாதாந்தக் கலந்துரையாடல்கள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளது.மாவட்ட விவசாயக் குழுக் கலந் துரையாடல் 22.02.2005 மு.ப.10. மணிக்கும், அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் 22.02.2005 நண்பகல் 12.00 மணிக்கும் நடைபெறும்.

28.02.2005 இல் நிகோட் திட்டக் கலந்துரையாடல் காலை 9.00 மணிக்கும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் 10.30 மணிக்கும் நியாப்திட்டக் கூட்டம் 11.30 மணிக்கும், அவசர புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி திட்ட (நீர்ப்)கூட்டம் 1.00 மணிக்கும் உலக உணவுத்திட்டக் கூட்டம் ந.ப.2.00 மணிக்கும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக் கூட்டம் பி.ப.3.00 மணிக்கும் சுற்றாடல் பாதுகாப்புகுழுக்கூட்டம் 4.00 மணிக்கும் நடைபெறவுள்ளதாக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (20)

# சுனாமியால் பாதிப்புற்ற மாணவர்களின் கல்விக்கு உதவ செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

## தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் தகவல்

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான செயற்றிட்டங்களைத் தமிழீழ மாணவர் அமைப்பு மிகவும் மும்முரமாக எடுத்து வருவதாகத் தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் நளன் தெரிவித்துள்ளார்.

சுனாமி பேரலை காரணமாக பாதிப்புக்குள்ளான முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கின் பிரதேசங்களில் பாதிப்புக்குள்ளாகியுள்ள மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான விசேட செயற்றிட்டங்களை விசேட செயலணிகளின் ஊடாக தாம் நேரடியாக மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பல்கலைக் கழக மாணவர்கள் வரை தாம் வேலைத் திட்டங்களை மேற்கொண்டுவருவதாகவும் வெளியிடங்களிலிருந்து பாதிப்பிற்குள்ளான மாணவர்களுக்கு உதவி புரிய வரும் அமைப்புக்கள் தம்முடன் தொடர்பு கொள்கின்ற பட்சத்தில் தாம் அந்த மாணவர்களுக்கு எந்தவகையிலான உதவிகள் தேவை என்பதை அறிவித்து பின்னர் அவர்கள் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு உதவிகளை நேரடியாகவே புரியலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுனாமியினால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவாகளாக இருக்கும் 14 மாணவர்களுக்கு தமது அமைப்பு 5000ஆயிரம் ரூபா பண உதவியினை செய்திருப்பதாகவும் நளன் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு அண்மையில் முள்ளியவளைப் பிரதேசத்தில் கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் தலைமையில் இடம் பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் பல அமைப்புக்களைச்சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். சிறப்புரைகளை அரசசாரா ஒன்றியத் தலைவர் சிவனடியார், முல்லை மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் ஆற்றினார்கள். இதற்கான நிதியுதவியினை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்ற நடமாடும் அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கையின போது பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு விண்ணப்பங்களை வழங்குவதனைப் படத்தில் காணலாம். (படம்–சோதி)

## வாய்க்கால் புனரமைப்பில் தாமதம் உப உணவுப் பயிர்ச் செய்கை பாதிப்பு

முத்துஐயன் கட்டு வலதுகரை இடதுகரை பிரதான வாய்க்கால்கள் அருகே பற்றைகள் காணப்படுவதால் வலதுகரை 5ம்,6ம்,7ம் கண்டம் மக்கள் உப உணவு செய்கையினை மேற்கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பற்றைகளை வெட்டுவதற்கான ஒழுங்குகள் சனவரி மாதம் மேற்கொண்ட போது இதுவரையிலும் எவ்விதமாக வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் வலதுகரை வாய்காலால் கற்சிலைமடுவிலுள்ள முறிப்பும் புளியங்குளத்திலுள்ள முறிப்பும் கட்டப்படவில்லை.

பொதுக் கூட்டத் தீர்மானத்தின் படி சனவரிமாதம் முதலாம் திகதி நீர் வழங்கல் வேண்டும் எனக் கூறப்பட்ட போதும் வாய்க்கால் கதவு வேலைகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை.

இவ்வேலைத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தினை கமக்காரர் அமைப்பு மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (08)

# வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் சிறு பகுதி உதவி கிடைத்தது

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் றிச்சாட் பதூர்தீன் வழங்கப்பட்ட பொருட்களின் ஒரு தொகுதி கடந்த வெள்ளியன்று முல்லை மாவட்ட அரச அதிபர் செயலகத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதற்கு முன்னரும் ஒரு தொகுதி பொருட்கள் கொண்டு வரப்பட்டிருந்தது. தற்போது நீர் இறைக்கும் இயந்திரம் 18, கண்ணாடி இழை ஒட்டும் பசை 13 பரல், பாடசாலைப்பை 4000, குக்கர் 204 என்பனவே வந்துள்ளன.

இப் பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெகு விரைவினில் வழங்கப்படவுள்ளதாக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (20)

# போருக்கான சூழலைத்தான் அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது

## -திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்டனம்

(திருகோணமலை)

**போருக்கான சூழலைத்தான் அரசாங்கம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. போர் வரும் என்ற அச்சத்தில்தான் சமாதான காலத்திலும் எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்று விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், சம்பூர்- நவரத்தினபுரத்தில் சமுதாய முன்னேற்ற நிலையத்தின் தொழிற்பயிற்சிக் கூடத்திறப்பு விழா நிகழ்வில் பேசும் போது தெரிவித்துள்ளார்.**

தீர்வு ஒன்றைத் தருவதற்கு அரசாங்கம் தயாராக வேண்டும். அரசாங்கம் இதில் தவறுமேயானால் எவ்வழியில் எமது இலக்கை நாம் அடையமுடியுமோ அவ்வழியில் நாம் சென்று அடைவோம். அந்த நிலைமைக்குத்தான் அரசாங்கம் எம்மை தள்ளிவருகின்றது. என்றும் எழிலன் குறிப்பிட்டார்.

எமது பிரச்சினைகளுக்கான தீர்வை நாமே தேடிக் கொள்ள வேண்டும். எவ்வாறான தீர்வுமின்றி நாம் வாழ முடியாது. 185 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் அனான், கௌசல்யன் கொலைக்கு கண்டனம் தெரிவித்தது பேரினவாதிகளுக்கு பிடிக்கவில்லை. 185 நாடுகளில் ஆக நான்கைந்து நாடுகள் தான் விடுதலைப் புலிகளை தங்கள் நாட்டில் தடை செய்துள்ளன. ஏனைய 180 நாடுகளும் தடை செய்யவில்லையே அந்நாடுகளின் எண்ணங்களை ஐ.நா. பொதுச் செயலாளர் பிரதிபலிக்கின்றார் என்றும் எழிலன் குறிப்பிட்டார்.

இப்போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் தங்களுக்குள் ஒரு நாடகமாடுகின்றனர். தீர்வு ஒன்றை முன்வைப்பதை இழுத்தடிப்பதே இந்த நாடகத்தின் ஒரே நோக்கமென்றும் எழிலன் தெரிவித்தார்.

கடற்கோளின் பின்னர் எமது தாயகத்தில் மேற்கொள்ளப்படும் நிவாரண புனர்நிர்மாணப் பணிகள் எல்லாம் ஆக்கிரமிப்புக்கான நடவடிக்கையாகக் காணப்படுகின்றன என எழிலன் மேலும் தெரிவித்துள்ளார். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்ட உறுப்பினர்களில் ஒருவரும் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளருமான எஸ்.தர்மலிங்கம் பேசுகையில், போர்க்காலத்தில் மட்டுமல்ல எக்காலத்திலும் அபிவிருத்தியடையாத பின் தங்கிய பகுதிகளாகவே விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்கள் காணப்படுகின்றன என்று தெரிவித்தார். (25)

# மாதகலில் படகுத் திருத்தகம் திறந்துவைப்பு

( யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள வலிகாமம் பகுதி கடற்தொழிலாளர்களது நலன்கருதி யாழ்.மாதகல் பிரதேசத்தில் படகுகள் திருத்தகமொன்று கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

.இந்நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழீழ கடற்படையின் தளபதிகளில் ஒருவரான செழியன், கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் தவரட்ணம், யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இப்படகு திருத்தும் நிலையத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வைபவரீதியாகத் திறந்துவைத்தார்.

இதில் சுனாமியால் சேதமடைந்த படகுகள் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படவுள்ளன. இந்நடவடிக்கைகளுக்கு சர்வதேச நிதி நிறுவனங்கள் உதவிகளை வழங்கவுள்ளன. (33)

# சாவகச்சேரி, சரசாலைப்பகுதியில் தொடரும் கசிப்பு விற்பனை

## -பொலிசார் அசமந்தமென மக்கள் குற்றச்சாட்டு

(தென்மராட்சி)

சிறிலங்காப் பொலிசாரின் துணையுடன் சாவகச்சேரி சரசாலை தெய்வங்கேணிப்பகுதியில் கசிப்புச் சாராய விற்பனை தொடர்ந்தும் இடம் பெற்றுவருகின்றது. பல தடவைகளுக்கு மேல் இப்பிரதேச மக்களால் சிறிலங்காப் பொலிசாரின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் இதுவரை இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை.

சமூக விரோதச் சக்திகளையும் சமுதாயச்சீரழிவையும் பொலிசார் ஊக்குவித்து வருவதாக இப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளனர். (28)

# 4 சந்தேக நபர்கள் அடையாள அணிவகுப்பில்

(நல்லூர்)

மல்லாகம் பிரதேச மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் அச்சுவேலி நகரப்பகுதியில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவத்தில் அச்சு வேலிப்பகுதியைச் சேர்ந்த நால்வர் அச்சுவேலிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப் பட்டு, அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி வசந்த சேனன் முன்னிலையில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் இடம்பெற்றது.

மல்லாகம் மதுவரித்திணைக்களத்தைச் சேர்ந்த கனகசபை தருமசீலன், முத்துக்குமாரசாமி, சுந்தரகாசன், இராசையா, நேசகுமார், சேர்விஜயரூபன், மா.வைகுந்தவாசன் ஆகியோர் அச்சுவேலிப்பகுதியில் வைத்து தாக்கப்பட்டது குறித்தே கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் அடையாள அணிவகுப்பிற்குட்படுத்தப்பட்டனர்.

அடையாள அணிவகுப்பில் 32 பேர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு அவர்களுடன் நான்கு சந்தேகநபர்களும் நிறுத்தப்பட்டிருந்தனர். சந்தேக நபர்களில் மூவரை சாட்சிகள் அடையாளம் காட்டினார்கள்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபர்களை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி. சறோஜினி இளங்கோவன் அடுத்தமாதம் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். (41)

# சமுதாய முன்னேற்ற நிலையத்தின் தொழிற்பயிற்சி நிலையம் சம்பூரில் திறப்பு

(திருகோணமலை)

கிளிநொச்சியைத் தலைமையாகக் கொண்ட சமுதாய முன்னேற்ற நிலையம் மூதூர்க்கிழக்கு-சம்பூர் பிரதேசத்தில் நவரத்னபுரம் என்ற இடத்தில் கிழக்கு மாகாணத்திற்கான தனது முதலாவது தொழிற்பயிற்சி நிலையத்தை கடந்த புதன் கிழமை காலை திறந்து வைத்தது.




நிலைய மண்டபத்தை விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டக் கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் திறந்து வைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் ஏற்றிவைத்தார். வண.ஏ.ஏ.ஜி.சத்தியராஜ் நிலையப் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்தார். ஈகச்சுடரை மாவீரர் ஒருவரின் தாயார் ஏற்றினார். சமுதாய முன்னேற்ற நிலைய ஒருங்கிணைப்பாளர் மற்றும் தமிழீழ கொள்கைப்பரப்புப் பொறுப்பாளர் ரமேஷ் மங்கலவிளக்கினை ஏற்றி னார்.

சமுதாய முன்னேற்ற நிலைய தலைமைக்காரியாலய முகாமையாளரும் செயலாளருமான எஸ். கணேஸ்வரன் ஆரம்பஉரையில் நிலையத்தின் ஐந்து தொழிற்பயிற்சி நிலையங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் இயங்கிவருவதாகக் குறிப்பிட்டார்.

1996ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சமுதாய முன்னேற்ற நிலையம் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் கல்விச்செயற்பாடுகளை வழங்கவே ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் தற்காலிக வீடுகளை அமைத்துக்கொடுத்து வந்தது. இப்போது இவ்வமைப்பு நிரந்தர வீடுகளை அமைத்து வழங்குவதாகவும் கணேஷ்வரன் தெரிவித்தார்.

சமுதாய முன்னேற்ற நிலையம் தையல் மற்றும் தொழில்களில் வெறும் பயிற்சியை மாத்திரம் வழங்கும் அமைப்பல்ல. தொழில் வாய்ப்புக்களையும் இந்நிலையம் பெற்றுக்கொடுக்கிறது. நிலையத்தின் தொழிற்பயிற்சிக் கூடங்களில் பயிற்சி பெற்றோரில் 99 சதவீதமானோர் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றிருப்பதாகவும் கணேஷ்வரன் தெரிவித்தார். தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் சம்பூரில் சமுதாய முன்னேற்ற நிலையத்தின் தொழிற்பயிற்சிக் கூடம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், 30 பெண்களுக்கு முதலில் தையல் பயிற்சி வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். கல்வித் திணைக்களம், முறைசாராக்கல்விப் பிரிவுடன் இணைந்து அவற்றின் பாடவிதானத்துக்கு ஏற்ப கணினிப் பயிற்சி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கணேஷ்வரன் தெரிவித்தார். (25)

# கசிப்பு உற்பத்தி,விற்பனை குறித்து ஒரேநாளில் 18 வழக்குகள் தாக்கல்

(நல்லூர்)

கசிப்பு உற்பத்தி செய்தமை, உபகரணங்களைத் திருத்தாமை அரசசாராயத்தை அனுமதிப் பத்திரமின்றி விற்பனை செய்தமை சம்பந்தமாக மது வரித்திணைக்களத்தினால் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களுக்கு 86 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் மது வரித்திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட குப்பிழான் தெற்கைச் சேர்ந்த வன்னியன் தியாகராசா என்பவருக்கு 55 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

உரிய தொகையை செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் 18 மாத கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

சங்கானை மது வரித்திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட நாகராசா பாக்கியம் என்பவருக்கு 750 மில்லிலீற்றர் அரச சாராயத்தை அனுமதிப்பத்திரமின்றி விற்பனை செய்தமைக்காக 10 ஆயிரம் ரூபாவும் அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் ரவிச்சந்திரன் என்பவருக்கு 250 மில்லிலீற்றர் வடிசாரயம் விற்பனை செய்தமைக்காக 12 ஆயிரம் ரூபாவும்,

மானிப்பாயைச் சேர்ந்த செல்வராசா அருள்ராஜ் கால்போத்தல் அரச சாராயத்தை விற்பனைக்கு வைத்திருந்தமைக்காக ஒன்பதாயிரம் ரூபா தண்டமாகவும் விதிக்கப்பட்டது.

உரிய பணத்தை கட்டத்தவறினால் 3 மாத கால கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோபன் முன்னிலையில் உரியவர்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து இத் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மல்லாகம் நீதிமன்றில் கடந்த வெள்ளிக் கிழமை மட்டும் கசிப்பு உற்பத்தி விற்பனை சம்பந்தமான மேலும் 18 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட உடுவில். தெல்லிப்பழை, சங்கானை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் கசிப்பு உற்பத்தி மற்றும் அனுமதிப் பத்திரம்பெறாத மதுபான விற்பனை நிலையங்கள் குறித்தே இவ்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதனால் இளைய தலைமுறையினரில் ஒரு பகுதியினர் கசிப்புக்கு அடிமையாகி உடல் பாதிப் படைந்து வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருவதையும் வைத்தியசாலை புள்ளி விபரங்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.

கிராம அலுவலர்கள் தமது கடமைப் பொறுப்புக்களை உணர்ந்து இத்தகைய கசிப்பு உற்பத்தி விற்பனை மற்றும் அனுமதிப்பத்திர மற்ற மதுபான விற்பனை நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கையெடுக்க வேண்டும் என பொது மக்கள விரும்புகின்றார்கள். (41)

# கல்வி நிர்வாகத்திற்கு தமிழ் பிரிவை ஏற்படுத்துக!


## –தமிழ்–முஸ்லிம் புத்தி ஜீவிகள் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு இசுறுபாயாவில் அமைந்துள்ள மத்திய அரசின் கல்வியமைச்சில் கல்வி நிர்வாகம் தொடர்பாக தமிழ்பிரிவு ஒன்று இல்லாமல் தமிழ் முஸ்லிம் கல்வித் துறைகளின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தமிழ் முஸ்லிம் புத்திஜீவிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

1976 ஆம் ஆண்டுக்கு முன்னர் இதே போன்ற பிரிவு இயங்கியதால் நாடு முழுவதும் உள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலைகள் திறமையாக செயற்பட்டன. தேசியப்பாடசாலைப் பிரிவு, கல்வியற் கல்லூரி, ஆசிரியக் கல்விப் பிரிவு, இந்து சமயம், கிறிஸ்தவசமயம் என்பனவற்றுக்குப் பொறுப்பாக தமிழ் கல்விப் பணிப்பாளர்கள் எவருமே இதுவரை நியமிக்கப்படவில்லை. இதனால் இப்பிரிவுகளின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றை சிங்கள அதிகாரிகள் கவனித்து வருகின்றனர். போதிய தமிழ்எழுது வினைஞர்கள், தமிழ் தட்டெழுத்தாளர்கள் எவரும் நியமிக்கப்படாததால் தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் இங்கு வந்து தமது தேவைகளையும், சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழ் மொழித்தினத்துக்காக மட்டும் ஒரு தமிழ்க் கல்விப் பணிப்பாளர் பணிபுரிகின்றார். இவர் தமிழ் மொழித் தினம் தொடர்பான பணிகளை மட்டுமே செய்து வருகின்றார்.


# பல்லாயிரம் பேரின் உயிரைக் குடித்த கடல் இறந்த குழந்தையின் உடலைத் தாலாட்டிக் கொண்டிருந்தது



முள்ளியவளை தண்ணீர் ஊற்றில் வசித்துவரும் கள்ளப்பாட்டு கிராம அலுவலர் சேந்தன் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு சிறிதுநேரத்தில் சென்றிருந்தார். அந்தப்பகுதியில் அவர் முன்னர் கண்டவற்றையும் அலைஅடித்த வேளை கண்டவற்றையும் தனது கிராம மக்கள் எப்படி அவலப்பட்டிருக்கிறார்கள் என்பவை பற்றியும் விபரிக்கிறார்.

**பகுதி -27**

**தண்ணீர்ஊற்றில** இருக்கிற எங்கட வீட்டில் இருந்து வற்றாப் பளையில இருக்கிற தென்னந் தோட்டத்துக்குப் போயிருந்தன் அங்க போய் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்க ஒரு அம்மா றோட்டால அழுது குழறிக் கொண்டு ஓடி வந்தா அந்த அம்மாட்ட என்னபிரச்சினை எண்டு கேப்பம் எண்டு கிட்டப் போய்க்கதை கேக்க அவர் "ஐயா முல்லைத்தீவு எல்லாம் தண்ணிவந்திட்டுது என்ர பிள் ளையள் ஒண்டையும்



காணேல்ல செத்துப் போச்சுதுகளோ தெரி .யேல்ல ஒண்டையும் காணேல்ல" எண்டு சொன்னார்.

இதைக் கேட்ட உடனயுமே என்ன முழங்கால் அளவு தண்ணி தான் வந்திருக்கும் என்று எனக்குள் நினைச்சன் எதுக்கும் என்ர கள்ளப்பாட்டு கிராமச் சனங்கள் என்ன பாடுபட்டிருக்குங்கள் கடல் கரை கிராமம்தானே அது எண்டு நினைச்சு சைக்கிளை எடுத்துக் கொண்டு முல்லைத்தீவு நோக்கி வேகமாய் போய்க் கொண்டிருந்தன்.

சிலாவத்தை சந்திக்குகிட்ட போட்டன் எங்கட எம்.பி கனகண்ணயும் வேறு ஆக்களும் அதில நிண்டிச்சினம் கொஞ்சச் சனங்கள் அதில காயங்களோட நனைஞ்சு போய் அரைகுறை உடுப்போட வந்து கொண்டிருந்தினம். அந்த ஆக்களுக்குள்ள ஆராவது தெரிஞ்ச ஆக்கள் என்ர கள்ளப்பாட்டு கிராம ஆக்கள் வருகினமோ எண்டுபாத்தன் எனக்குத் தெரிஞ்சமுகம் ஒண்டு சந்திரண்ணா போல இருக்கவேணும் உள்ளாடையோட மட்டும் தள்ளாடியபடி நடந்து வந்து கொண்டிருந்தார்.

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

என்னைக்கண்டதும் இறுகக் கட்டியணைத்து கதறி அழுதார். பாவம் சந்திரண்ணன் பாசமாய் வளர்த்த நாலுபிள்ளையளையும் மனைவியையும் கடல் கொண்டு போய்விட்டது அவர் வாய் கிழிந்து இரத்தம் ஓடிக் கொண்டிருந்த நிலையில் தனியாக நின்றார்.

அவருக்கு ஆறுதல் சொல்லி விட்டு உண்ணாப்புலவு சந்தியையும் தாண்டி கள்ளப்பாட்டுக்கு போற ஒழுங்கையால உள்ளுக்குப் போக சனங்கள் எல்லாம் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். ஏற்கனவே பழகியமுகங்கள் எல்லாம் ஏதோ அங்கலாய்ப்புடன் இருந்தது அவர்களுடன் நான் நெருங்கி வேலை செய்ததால் அவர்கள் என்னில் நிறையப்பாசம் வைத்திருந்தார்கள் அதனால் அதில் ஓடிவந்து கொண்டிருந்த பெண்கள் "ஐயா என்னையா எங்களுக்கு ஏன் இப்படி நடந்தது" என்று என்னை கட்டி அழுதார்கள் .

அவர்கள் எல்லாருக்கும் நான் ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டு தொடர்ந்து போய்க் கொண்டிருந்தேன். அவர்கள் கதறி அழும்போதும் நான் இப்படி இழப்பு வந்திருக்கும் எண்டு நினைக்கவே இல்லை.

ஒருமாதிரி இறால் குளத்துக்குக் கிட்ட போய் விட்டேன் அதில் தான் கடல் தண்ணியை நான் கண்டேன் அந்த இடத்தில் நிண்டுபாக்க மெதுவானபுகை மாதிரி எங்கும் கடல் தான் தெரிந்தது. கம்பிக் கட்டைகள் ,வீட்டுக்கூரைகள் ஊரிலை சனங்களின் சாமானுகள் எல்லாம் இறால் குளத்துக்கு பக்கத்தில் ஒதுங்கிப் போய் இருந்தது அதைப் பார்க்க 'சேதத்தின்ர தன்மையை ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது.

இப்படி இருக்க ரண்டு பேர் போட்டில வந்து கொண்டிருந்தினம் அவயின்ர உதவியோட குளத்தின்ர அங்காலக்கரைக்குப் போனன். அங்கால ரண்டு மூண்டு பேர் வழியில நிண்டிச்சினம் போட்டால இறங்கி நடந்து போக முதலாவதா ஒரு பொடியைக் கண்டன். அது தண்ணியோட அடிபட்டு வந்து ஒதுங்கிக்கிடந் திச்சுது. யாருடைய பொடியாக இருக்கும் எதுக்கும் கிட்டப் போய்ப்பாப்பம் எண்டு கிட்டவாய் போய்ப்பாத்தன் எங்களோட் வேலை செய்த மனிதவள இணைப்பாளர் விக்கினேஸ்வரன். அவர் நல்ல ஆரோக்கியமான உடல்கட்டு உடையவர். அது மட்டும்மில்லாமல் கடைசியா நடந்த நீச்சல் போட்டியில நீந்தி வெற்றி பெற்றவர். அவருக்கே இந்த நிலையா? அவரின் உடல் தசைகள் எல்லாம் பிளந்து போய் கிடந்தது. விக்கி அண்ணாவைப்பாத்த உடன எனக்கு அழிவின் முழுத்தன்மையும் விளங்கிச்சு .

நான் பொறுப்பேற்கும் போது 75 குடும்பம் இருந்தது. அது ஆமி அடிச்ச காலம் இப்ப சுனாமி அடிக்கேக்க 512 குடும்பம் இருந்தது. இந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றையும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் ஒவ்வொருத்தருமே எனக்கு உறவு மாதிரித்தான். தங்களின் பிரச்சினையள் எல்லாத்தையும் என்னட்ட மனந்திறந்து கதைப்பினம் அந்தளவுக்கு நான் அந்தமக்களோட நெருங்கிப் பழகினனான். சுனாமி அழிவில கூடின உறவுகளை இழந்தவன் நானாகத்தான் இருப்பேன்.

பார்க்கிற இடம்மெல்லாம் ஆண்கள், பெண்கள், சின்னப் பிள்ளையள் எல்லாற்றை பொடியும் குப்புறக்கிடந்தது எனது கிராம ஆக்கள் கனபேர் இல்லை. ஒவ்வொரு சடலங்களையும் தூக்குகின்ற பொழுது இது யாருடைதாய் இருக்கும் என்ற ஏக்கத்துடன் தான் ஒவ்வொரு சடலங்களையும் தூக்கினேன்.

இப்பிடியே கொஞ்ச பொடியளத் தூக்கினதோட எனக்கு மனம் மரத்துப் போச்சுது இப்படி இருக்க சூசை அண்ணாவோட சேத்து கொஞ்சப் பேர் முல்லைத்தீவு ரவுணுக்குள்ள இருந்து கள்ளப்பாட்டுக்கு வந்து கொண்டிருந்தினம். சூசை அண்ணா அங்க வந்து கொஞ்சப் போராளியளை மீட்புப்பணிக்கு என்னோட விட்டார் அந்தப் போராளியளோட சேந்து "யாராவது உயிரோட இருக்கிறீங்களா?" என்று கத்தினபடிதான் ஊருக்குள்ள போனம் ஒருசிலர் உயிரோட இருந்தினம் அவையள் ஒருத்தரும் எதுவுமே கதைக்கவில்லை உயிரோட இருந்த ஆக்களைத் தூக்கேக்க அவயின்ர வாயால நுரைகக்கினபடி இருந்தது.

இப்பிடியே இருக்க கடல் கொஞ்சம் அமந்து போச்சுது. இறால் குளததுக்கு வந்த கடல் தண்ணியால குளத்தின் ஒருபக்க கட்டு உடைச்சுசின்னாத்துக்குப் போய்க் கொண்டிருந்தது அதுக்குப்பிறகு ஒரு மாதிரி ரக்ரரைக் கொண்டு வந்து காயப்பட்ட ஆக்களை ஏத்தி அனுப்பினம்.

கள்ளப்பாட்டு கிராமத்துக்குள்ள செத்த ஆக்கள்பொம்பிளையளும் சின்னப்பிள்ளையளும் தான் கூட பொம்பிளை ஆக்களின்ர நீட்டு உடுப்புகளாலையும் அவையின்ர நீளமான தலை முடியாலையும் தான் அவயள் சாக வேண்டிவந்தது. எங்கபாத்தாலும் பொம்பிளை ஆக்கள் உடுப்பு இல்லாட்டில், தலைமுடி சிக்குப்பட்டுப் போய்த் தான் கிடந்தார்கள் நாங்கள் தனிய ஐம்பது பேருக்கும் அதிகமான பொம்பிளை ஆக்களின்ர பொடிசிக்குப்பட்டபடி எடுத்திருப்பம்.

குழந்தப்பிள்ளையளின் உடல்களைப் பொறுத்தவரை பரிதாபமாகஇருந்தது ஒவ்வொரு சடலங்களையும் பார்க்கின்ற போது மனம் சகிக்க முடியாமல் இருந்தது. கடல்கரை ஓரமாக நான் மீட்புப் பணி செய்து கொண்டு போனன் அப்பிடியே போய்க் கொண்டிருக்கேக்க கடல் கரையில ஒரு சின்னப் பிள்ளை துடிச்சுக் கொண்டிருந்த மாதிரி இருந்தது அந்தப் பிள்ளையைத் தூக்குவம் எண்டு கரைக்கு ஓடிப்போனேன் பிள்ளை இறந்துபோய்க்கிடந்தது. அலை வந்து அடித்துத் தாலாட்டிக் கொண்டிருந்தது. பிள்ளையின்ர கையள் ரண்டிலையும் காப்பு இருந்தது. மோதிரம் சங்கிலி எல்லாம் போட்டபடி இருந்தது. உண்மையிலேயே வடிவான பிள்ளை பாத்தால் சரியான கவலையாய் இருந்தது.

அந்தப்பிள்ளையை தூக்கிக் கொண்டு வந்து சிறிமுருகன் சங்கம் இருந்த வீட்டிற்கு வந்தன் அந்த வீட்டில ஒரு தட்டிவான் இருந்தது. அதுபிரண்டுபோய் இருந்தது வானுக்கும் நிலத்துக்கும் இடையில் அரைவாசி உடம்பு வெளியால தெரிஞ்சபடி ரண்டு சின்னப்பெடியளின்ர உடல் தெரிஞ்சது. அதைப்பார்க்க எனக்கு ஏதோ செய்தது. உடன அங்க நிண்ட போராளிகளும் நாங்களும் சேர்ந்து அந்தப்பிள்ளையள் ரண்டின்ர பொடியையும் வெளியால எடுக்கிறதுக்காக வானை மெல்லமெல்லமாத் தூக்கி நிமித்தினம். வானைத்தூக்கினதுதான் அதுக்குள்ள கண்ட காட்சிகள் எனக்கு மயக்கம் வரும்போல இருந்தது.

பத்துக்கும் அதிகமான சின்னப்பிள்ளைகள் நசிந்து போய்க் கிடந்தார்கள். அலை அடிக்கேக்க அவையள ஆரோ அதுக்குமேல தூக்கி ஏத்திவிட்டிருக்கினம். பேந்து வான் பிரளேக்க அதுகள் நசிபட்டுப் போச்சுதுகளாய் இருக்க வேணும் பரிதாபம் என்னை உலுப்பி விட்டதுயரம் இதுதான்.



இவற்றை எல்லாம் எடுத்து விட்டுக்கள்ளப்பாட்டு கடல்க்கரையில இருந்து நூற்றி ஐம்பது மீற்றர் தூரத்தில் இருந்த என்ர கிராம சேவகர் அலுவலகம் இருந்த வீட்டுக்குப் போனேன். அந்த வீட்டில வேலும் மயிலும் அண்ணாவும் அவற்ற மனைவியும், இரண்டு பிள்ளைகளும் இருந்தவை.

மயில் அண்ணை என்னை றோட்டில கண்டு அழுதுஅழுது தன்ர மனுசிபிள்ளைகளக் காணேல்ல எண்டு சொன்னவர் அவயளையும் பாப்பம் எண்டு அங்க போனன். அவயின்ர வீட்டபோன உடன மயில் அண்ணா மனைவி சுபத்திரா அக்கா வீட்டுக்குப்பக்கத்தில செத்துப்போய் இருந்தா. அவாவுக்கு அங்கால அவயின்ர ரண்டு பிள்ளையளும் செத்துப்போய் இருந்தினம்.

நான் ஒப்பிஸ்சில இருக்கேக்க அங்க வாற ஆக்களுக்கெல்லாம் சலிக்காமல் தேனீர் கொண்டு வந்துதாற சுபத்திரா அக்காவையும் நெடுக மாமா மாமா எண்டு ஓடி வாற அந்தப்பிள்ளையளும் இறந்து போய் கிடந்ததைப் பார்க்க என்னால தாங்கவே ஏலாமல் இருந்தது. அருமையான அந்தக் குடும்பம் அப்பிடியே அழிஞ்சுபோயி ருந்தது. இப்படியே அன்றைய தினம் முழுவதும் மனம் வெதும்பி வெதும்பி சடலங்களை அகற்றி னோம்.

நான் என்ர கிராம முன்னேற்றத்தில் தீவிரஅக்கறை கொண்டிருந்தனர் எல்லாத்தையும் கடல் கரைச்சிக் கொண்டு போட்டுது.

**அ.லோகீசன்**

என்ர கிராமத்தில வழமையா பெண்களின்ர தொகைதான் கூட. ஆனால் இப்ப ஆண்கள்தான் கூட இருக்கினம். இதுவரை பதிவின்படி 637 பேர் இறந்ததை உறுதிப்படுத்தி இருக் கிறம். என்ன செய்வது என்ர கிரா மத்தையே கரைச்சுக்கொண்டு போட்டுது என்று தனது துயரத்தைப் பகிர்ந்தார் அந்த இளம்கிராம சேவகர்.

எண்பது வயது நிரம்பிய முதியவர் ஒருவர் கள்ளப்பாட்டுக் கடல் கரையில் உள்ள தனது வீட்டில் இருந்து சுனாமி அலையில் அடிபட்டு உயிர்தப்பி இருந்தார். அந்த முதியவரைச் சந்தித்து அவரது அனுபவத்தைக் கேட்டிருந்தோம். அவர் என்ன சொல்கிறார் என்பதை அடுத்த பகுதியில் தருகிறோம்.

(தொடரும்)

**10.**

➡ நேபாளத்தில் வீட்டுக் காவலில் இருந்த மூன்று முன்னாள் பிரதமர் உட்பட ஏழு அரசியல் தலைவர்கள் விடுதலை.

➡ தாய்லாந்தின் தென்மாகாணமான நராத்தி வாட்டில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 6 பேர் காயம்.

➡ பசுபிக் பெருங்கடலிலுள்ள இரு நாடுகளான வனுபாது, பப்புவா நியூ கினியா என்னும் இரு நாடுகளையும் பூகம்பம் உலுக்கியது ரிச்டர் அளவு கோலில் 6.7 புள்ளியாகப் பதிவாகியது.

➡ பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் குவாடர் மாவட்டத்தில் உள்ள ஷாடிகொர் அணை உடைந்ததால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 150 இற்கும் மேற்பட்டோர் பலி.

**11.**

➡ அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஈராக்கிற்கு விஜயம்.

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வட கிழக்கே 45 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பலாட்ரஷ் பகுதியில் வெதுப்பகம் ஒன்றின் மீதும் மற்றும் ஈராக்கின் தென் கிழக்குப் பகுதி ஆகிய மூன்று இடங்களிலும் இடம் பெற்றகுண்டுத்தாக்குதல்களில் 38 பேர் பலி; 100 இற்கும் மேற்பட்டோர் காயம்.



➡ தமிழ் நாடு கோவையில் வீடொன்றில் ஏற்பட்ட திடீர்த் தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உடல்கருகிப் பலி;



➡ வெளிநாட்டினர் அமெரிக்காவில் குடியேறுவதைக் கடினமாக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டம் 216 பேரின் ஆதரவுடன் நிறை வேற்றப் பட்டது. 161 உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

**12.**

➡ வெனிசுவெலாவின் வடகிழக்குப் பகுதியில் கடும்மழை. வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவினால் 18 பேர் பலி ; 22 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர்.



➡ வடகொரிய இராணுவத்தினர் தென்கொரிய மக்களை தலைவர் இம் ஜோனுக்கெதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்தினார்கள். அமெரிக்க வடகொரிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்திய பின் இவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



➡ ஈராக்கில் பஸ்ரா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தஹா அல்பாஸ்நி காரில் சென்று கொண்டிருந்த போது தீவிர வாதிகளினால் சுட்டுக் கொலை.

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில்இடம் பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 18 பேர் பலி; 25 இற்கும் அதிகமானோர் காயம்.



➡ பங்களாதேஷின் தெற்குப் பகுதி நகரமான குல்னா அருகேயுள்ள ரட்டா ஆற்றில் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக் குள்ளானதில் 22 பேர் பலி.

**13.**


➡ இந்தோனேஷியாவில் நில நடுக்கம் இது ரிச்டர் அளவு கோலில் 5.6 ஆகப் பதிவாகியுள்ளது.

➡ நேபாளத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய பின் நடந்த முதல் அரச நிகழ்ச்சியான வசந்த கால நிகழ்ச்சிகளில் மன்னர் ஞானேந்திரா பங்கேற்பு.



➡ ஸ்பெயினின் வர்த்தக நகரான மெட்ரிஸில் 32 மாடிகளைக் கொண்ட முக்கிய கட்டடமொன்று தீப்பிடித்தது.

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்துக்கு அருகே முகாய்யிப் நகரில் கார்க்குண்டொன்று வெடித்ததில் 17 பேர்பலி; 16 பேர் காயம்.



**14.**

➡ ஈரான் தலைநகர் தெஹிரானில் உள்ள மசூதியில் தொழுகையின் போது ஏற்பட்ட தீவிபத்தில் 35 பேர் பலி. 200 பேர் காயம்.



➡ லெபனான் தலைநகர் பெய்ரூட் நகரில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் முன்னாள் பிரதமர் உட்பட 11 பேர் பலி. முன்னாள் அமைச்சர் உட்பட 35 பேருக்குக்காயம்.



➡ சீனாவின் லியோனிங் மாகாணத்தில் புக்சின் என்ற இடத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் 203 தொழிலாளர்கள் பலி. 22பேர் காயம்.

## கடந்த வாரத்தில்

## 10.02.2005-16.02.2005




➡ இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 25 பேர் காயமடைந்தனர்.

➡ பிலிப்பைன்ஸில் மூன்று இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 11 பேர் பலி ; 130 பேர் காயம். இச்சம்பவம் மணிலாவிலும், பிலிப்பைன்ஸின் தென்பகுதியில் உள்ள தீவான மிண்டானோஷின் கரையோர நகரங்களிலும் இடம்பெற்றது.

**15.**

➡ பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் 2ஆம் கட்டத் தேர்தல் இடம் பெற்றது. இதன்போது பல வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றன.


➡ இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில் கடாங் என்ற ஊரிலும், வடமேற்கு சீனாவின் ஸின்ஜியாங் உய்குர் தன்னாட்சி பகுதியில் உள்ள வூஷி என்ற ஊரிலும் பூகம்பம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**16.**

➡ தென்பசுபிக் கடற்பகுதியில் கடும் சூறாவளி வீசியதால் கொக்தீவு உள்ளிட்ட பல தீவுகள் நீரில் மூழ்கின.

➡ ஜப்பானின் தலைநகர் டோக்கியோவிற்கு வடக்கே 40 கிலோமீற்றர் தூரத்தில் பூகம்பம் ஏற்பட்டது. இதுரிச்டர் அளவு கோலில் 5.4 புள்ளியாக பதிவாகியது.

➡ தாய்லாந்தில் நராதிவாத் மாகாணத்தில் ராநாகி மாவட்டம் அருகேயும், ரீசோ மாவட்டத்தில் ரப்பர் தோட்டம் அருகேயும் குண்டு வெடித்தது, இதில் 6பேர் காயமடைந்தனர், இச்சம்பவம் தாய்லாந்து பிரதமர் தட்சின் ஷினோவத்ரா, இப்பகுதிக்கு விஜயம் செய்வதைக்கண்டித்து அவரைக் கொலை செய்வதற்காகவே இவ்வாறு மேற்கொள்ளப் பட்டதாகவே கூறப்படுகின்றது.




### -கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையால்-

# 2004 க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலய கல்விப் பணிமனையினரால் 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரத்தில் தோற்றிய மாணவர்களுக்கும் மற்றும் க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் இலவச கணனிப் பயிற்சியும், தட்டெழுத்து,சுருக்கெழுத்துப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 11.00 மணிக்கு கிளி.வலயக்கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சியில் கலந்து கொள்ளவிரும்புவர்கள் சுய விபரம் அடங்கியவிண்ணப்பம், கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, ஏனைய பொருத்தமான ஆவணங்களுடன் வலயக் கல்விப் பணிமனைக்கு நேர்முகத்தேர்விலன்று சமுகமளிக்கும்வண்ணம் கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர்ப.அரியரத்தினம் வேண்டியுள்ளார். (சோ)

# தலையற்ற பெண்ணின் சடலம் குடாரப்பில் கரையொதுங்கியது

16.02.2005 அன்று வடமராட்சி கிழக்கு குடாரப்புப்பகுதியில் கடலிலிருந்து தலையில்லாத சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது. இதைக் கண்டவர்கள் மருதங்கேணி காவல்பணிமனைக்குத் தகவல் கொடுத்துள்ளனர். உடனடியாகக் குடாரப்புப் பகுதிக்குச் சென்ற மருதங்கேணி காவல்பணிமனையினர் சடலத்தை எடுத்துப்பார்த்தபோது அச்சடலம் தலையில்லாமல் முற்றாக உருக்குலைந்த நிலையில் இருந்தது. சடலம் ஆணா பெண்ணா என்று அடையாளம் காணப்பட முடியாத அளவுக்கு சிதைந்து இருந்தது. சடலத்தில் பெண்கள் அணியும் உள்ளாடை இருந்தநிலையில் இது பெண்ணினுடையது என்றும் உள்ளாடையை வைத்து வெளிநாட்டு நபருடையது என்றும் அவர்களினால் தெரிவிக்கப்பட்டது. இவர் கடந்த 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமியில் பலியாகியிருக்கலாம் என்றும் தெரிவித்தார்கள். தாம் சடலத்தினை அவ்விடத்திலேயே புதைத்துள்ளதாகவும் காவல் பணிமனையினர் தெரிவித்தனர். (11)

# பயிர் செய்யப்படாத நிலங்களை அரசு சுவீகரிக்கத் திட்டம்

## -வடக்கு-கிழக்கில் அமுலாக்க எதிர்ப்பு

(கொழும்பு)

பயிர் செய்யப்படாமல் இருக்கும் நிலங்களை அரசாங்கம் சுவீகரிக்கவுள்ளமை வடக்கு கிழக்கு பகுதி மக்களைப் பாதிக்கும் என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணி அமைச்சில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க பயிர்செய்யப்படாத காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கவுள்ளதாக தெரிவித்திருந்தார்.பல நில உரிமையாளர்கள் தமது காணிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பதாகவும் இவ்வாறான காணிகளை அரசாங்கம் கைப்பற்றுவதற்குரிய சட்ட திருத்தம் விரைவில்

பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளதாக அமைச்சர்தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பகுதியில் பெருமளவு பயிர் நிலங்கள் செய்கை பண்ணப்படாமல் இருப்பதாகவும் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பானது இவ்வாறான நிலங்களைஅரசாங்கம் கைப்பற்றுவதற்கு ஏதுவாக அமைந்துவிடும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மேல் கொத்மலை திட்டத்திற்கு அங்கீகாரம்; இ.தொ.கா நிலைப்பாட்டிற்குக் கண்டனம்

(கொழும்பு)

மேல் கொத்மலை மின்மையத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமையானது கண்டிக்கத்தக்கது என புதிய சனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் முன்னர் இதனை எதிர்த்து வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தற்சமயம் இதற்கு ஆதரவு வழங்க முன்வந்திருக்கும் செய்தியானது வருந்தத்தக்கது என புதிய சனநாயகக்கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா தெரிவித்துள்ளார்.

எனவே மலையக மக்கள் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிராகத் தமது போராட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமெனவும் தம்பையா கோரியுள்ளார்.

இதேவேளை இந்தக் குற்றச்சாட்டு குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் தோட்ட உட்கட்டமைப்புத்துறை அமைச்சருமான முத்து சிவலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் ;

முன்னர் அரசாங்கம் கொண்டிருந்த கொள்கை தற்சமயம் மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளது. இதன்படி தமது கட்சி தெரிவித்த கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது என்றார்.

# தேசிய பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்காக இலங்கை கல்வி நிர்வாக சேவை,இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என கல்வி அமைச்சின் செயலர் தாராடிமெல் அறிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு உட்பட 67 தேசிய பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் அதேநேரம், தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 4 வாரகால பயிற்சியும் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார்.

# எம்பிலிப்பிட்டிய பகுதியில் 405 கிலோ கஞ்சா மீட்பு

எம்பிலிப்பிட்டிய பகுதியில் 405 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.ஒரு கிலோ கஞ்சாவின் பெறுமதி 13,000 ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. கைப்பற்றப்பட்டுள்ள கஞ்சாவின் மொத்த பெறுமதி 5.2 மில்லியன் ரூபா என மதிப்பிடப்படுகிறது.. இந்தக் கஞ்சாவை வைத்திருந்ததாகஇருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் விசாரணைகள் தொடர்கின்றன.


# பதவி வெற்றிடம்

வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், வவுனியா-வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ 05.03.2005 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சகல விபரங்களும் தெளிவாக உள்ளடக்கப்பட்டதாக சுயமாகத் தயாரித்து அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**01.இலிகிதர்:-302/14**

சம்பளம:- 31/99 இன் படி 5000.00-70.00X10-75X10 6450.00
60000.00-840.00X10-900.00X10-77400.00

கல்வித் தகைமை:- 01.க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் பாஷை, கணிதம்1/கணிதம்2/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

02.தமிழ்,கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம் 2/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

**02.கிளை முகாமையாளர்:-208/13**

சம்பளம்:-31/99 இன் படி 5250.00-75.00X10-80.00X10 -6800.00
63000.00-900.00X10-960.00X10-81600.00

கல்வித்தகைமை:-01.க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் பாஷை, கணிதம்1/ கணிதம்2/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

02.தமிழ்,கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம் 2/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

**03.வாகனக் காப்பாளர்:-314/16**

சம்பளம்:-31/99 இன் படி 4500.00-60.00X10-65.00X10-5750.00
54000.00-720.00X10-780.00X10-69000.00

கல்வித் தகைமை:-5 ஆம் ஆண்டு கல்வித் தகைமையுடன் நல்ல தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**04.வாகன சாரதி:-312/14**

சம்பளம்:-31/99 இன்படி 5000.00-70.00X10-75.00X10-6450.00
60000.00-840.00X10-900.00X10-77400.00

கல்வித்தகைமை: ஐந்தாம் ஆண்டு கல்வித் தகைமையுடன் பாரவூர்தி செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

தலைவர்,
வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி.
16.02.2005

(சி.11436)



# மாபெரும் இயல விற்பனை

ஹொண்டா, ஹீரோஹொண்டா, யமஹா, சுசுக்கி, பஜாஜ் ஆகிய இனங்களைக் கொண்ட உந்துருளிகள் இயங்கும் நிலை, உதிரிகளாக்கும் நிலையில் விற்பனைக்கு விடப்படும்.

பார்வையிடும் நாள் :- 17.02.2005,18-02-2005, 19.02.2005 வரை மட்டும்

இயலம் நடைபெறும் நாள் :- 22. 02.2005 காலை 09.மணிக்கு

இடம் :- உடைமைப் பகுதிச் செயலகம், வேணாவில், புதுக்குடியிருப்பு.





உந்துருளிக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 200/=

உதிரிகளுக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 500/=

(5690)

# இந்தியா-பாகிஸ்தான் பேருந்துப் போக்குவரத்து
# பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் கருத்து வேறுபாடு

(இஸ்லாமாபாத்)

**இந்தியா பாகிஸ்தானிடையே பேருந்து போக்குவரத்து தொடங்கும் முடிவிற்கு பாகிஸ்தான் எதிர்க்கட்சிகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.**

இந்தியா, பாகிஸ்தானிடையே அமைதிப் பேச்சை துரிதப்படுத்தும் வகையில் இருநாடுகளிடையேயும் பேருந்துப் போக்குவரத்து தொடங்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு பாகிஸ்தான் எதிர்க் கட்சிகள் மாறுபட்ட கருத்தை தெரிவித்துள்ளன. முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கட்சி இந்த முடிவை வரவேற்றுள்ளது. தலிபான் ஆதரவு ஜமாத் உலேமா இஸ்லாமியக் கட்சியும் இந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. அதே சமயம் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரிப்பின் கட்சி பேருந்து போக்குவரத்து முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந்த விடயத்தில் அரசு அதிகளவில் விட்டுக் கொடுப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

காஷ்மீர் பிரச்சினையை மூடி மறைக்கவே பேருந்து போக்குவரத்து தொடங்குவதாக முட்டாஹிதா மஜ்லிசி அமல் கட்சித் தலைவர் குவாசி ஹுசைன் அகமது குற்றம் சாட்டியுயிருக்கிறார்.

# இந்தியக் குடியுரிமை கோரும் எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ரீன்

(புதுடில்லி)

தனக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று சர்ச்சைக்குரிய எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ரீன் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த தஸ்லீமாநஸ்ரின் மருத்துவராக இருந்து எழுத்தாளராக மாறியவர். உத்தரப்பிரதேசத்தில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது அந்தச் சம்பவத்துக்குப் பின் கடந்த 1993 ஆம் ஆண்டு வங்கதேசத்தில் இந்துக்களின் பரிதாப நிலைபற்றி ("லஜ்ஜா) என்ற தலைப்பில் புத்தகம் எழுதினார். இதற்கு வங்கதேசத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. மேலும் 1994 ஆம் ஆண்டு தஸ்லீமாமாவுக்குக் கொலை மிரட்டலும் வந்தது. அந்த நூலை வங்கதேச அரசு தடை செய்தது இதனைத் தொடர்ந்து அவரைத் தங்கள் நாட்டிலிருந்து வங்கதேசம் வெளியேற்றியது தெரிந்ததே.

# இந்திய — சீன உறவு மேலும் வலுப்பெறுகிறது

## -சீனப் பத்திரிகை மதிப்பீடு-

(பீஜிங்)

இந்தியா-சீனா இடையேயான பரஸ்பர உறவு மேலும் வலுப்பெற்று வருவதாக சீனப் பத்திரிகை 'சீனா டெய்லி'கருத்துத் தெரிவித்துள்ளது.

உலகில் மக்கள் தொகை அதிகம் உள்ள இந்தியாவும். சீனாவும் முக்கிய பிரச்சினைகளில் தங்களுக்கு இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தி வருகின்றன என்றும் அந்த நாளேடு கருத்துத்தெரிவித்துள்ளது.

பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் இரு நாடுகளின் செல்வாக்கும நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.இந்தியா,சீனா இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தை புதுடில்லியில் இந்த ஆண்டு சனவரி 24 ஆம் திகதி நடந்தது.

அதையடுத்து , பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகளில் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

# இருதரப்புப் பிணக்குகள் குறித்து தொடர்ந்து பாக். உடன் பேசுவோம்

## –இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்–

ஏவுகணை சோதனை பற்றிய முன் அறிவிப்பு, இந்தியா-பாகிஸ்தான் கடலோரப் பாதுகாப்புப் படைகள் மற்றும் போதைப் பொருள் கட்டுப்பாடு, அதிகாரிகளுக்கு இடையேயான ஒப்பந்தம் பற்றி வருகிற ஜுலை மாதத்துக்குள் இறுதி செய்யும்படி இரு நாட்டு அதிகாரிகளுக்கும் உத்தர விடப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் கூறியுள்ளார்.

அமைதி மற்றும் பாதுகாப்பு அணுவாயுத பயன்பாட்டில் நம்பிக்கையூட்டும் நடவடிக்கை வர்த்தகம், மற்றும் காஷ்மீர் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் ஆக்கபூர்வமான தீர்வு காண்பதற்குத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி முகமது கசூரி முக்கிய பிரச்சினையான காஷ்மீர் பிரச்சினைக்கு காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப விரைவில் இறுதித்தீர்வு காணவேண்டும் என்று இந்தியாவிடம் வற்புறுத்தி இருப்பதாக தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# பீகாரில் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு வரும் புதன்கிழமை நடைபெறும்

(புதுடில்லி)

பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் நடைபெற இருக்கும் தேர்தலுக்கான இறுதிக்கட்டத் தேர்தல் பிரசாரங்கள் இன்று மாலையுடன் முடிவடையவுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் 28 சட்டசபைத் தொகுதிகளிற்கும் பீகாரில் 94 சட்டசபைத் தொகுதிகளிற்கும் வரும் புதன்கிழமை மூன்றாவதும் இறுதிக்கட்டவாக்குப் பதிவும் இடம்பெறவுள்ளது.

தேர்தலை முன்னிட்டு வாக்குப் பதிவு இடம்பெறும் பல பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பீகாரில் 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட பாதுகாப்பு படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக இந்தியச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## அணு வாயுத கறுப்புச் சந்தையில் இடைத்தரகரான

# இலங்கை வர்த்தகரை அமெரிக்காவிடம் கையளிக்கமாட்டோமென்கிறது மலேசியா

அணுவாயுத கறுப்புச்சந்தையில் இடைத்தரகராக செயற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கை வர்த்தகரை அமெரிக்காவிடம் கையளிக்கப் போவதில்லை என்று மலேசியப் பிரதமா அப்துல்லா அமாட்படாவி தெரிவித்துள்ளார்.

இவ் வர்த்தகர் கடந்த வருடம் அணுவாயுதச் சந்தையில் இடைத் தரகராக செயற்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டு மலேசியாவில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் தொடர்புபட்டிருந்த கறுப்புச் சந்தை வலையமைப்பு பாகிஸ்தான் விஞ்ஞானி ஒருவரின் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டு வந்தது. தற்போது அவ் விஞ்ஞானி பாகிஸ்தானில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மலேசியாவில் வசிக்கும் இந்த இலங்கையர் பாகிஸ்தானைச் சேர்ந்த விஞ்ஞானிக்கு அணுவாயுத தொழில் நுட்பத்தை விற்பனை செய்வதில் உதவியதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இவர் கடந்த ஆண்டு மே.மாதம் கைது செய்யப்பட்டு உள்நாட்டு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மலேசியா தெரிவித்துள்ளது.

இவரை அமெரிக்காவிடம் கையளிக்கும் திட்டம் எதுவும் இருக்கின்றதா என்று கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த மலேசியப் பிரதமர் இது தொடர்பான எவ்வித நகர்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், குற்றம் சாட்டப்பட்டவர் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்

## –சர்வதேச கண்டுபிடிப்புக்கள் குறித்து–

# நாசா நிறுவனம் நடத்திய தேர்வில் உத்தரப் பிரதேச மாணவன் முதலிடம்

அமெரிக்காவிலுள்ள விண்வெளி ஆய்வு கூடம் சமீபத்தில் நடத்திய சர்வதேச அறிவியல் கண்டுபிடிப்புக்களுக்கான தேர்வில் முதலிடத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ள. உத்தரப்பிரதேசத்தின் நர்ஹாய் கிராமத்தைச்சேர்ந்த மாணவர் சௌரல்சிங் (வயது-17) இதன் மூலம் 1960 இல் இத்தேர்வு எழுதி 7 ஆம் இடத்தில் வெற்றி பெற்ற குடியரசுத்தலைவர் அப்துல்கலாமை விஞ்சிவிட்டார் சௌரல்சிங்.

கொலம்பியாவின் விண்வெளிக்கலம் வெடித்துச் சிதறியதில் உயிரிழந்த இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லா,1998 இல் இத்தேர்வில் 21 ஆவது இடத்தில் வெற்றி பெற்றார்.12 ஆம் வகுப்பு படித்து வரும் சௌரல் ஐ.ஐ.டி நுழைவுத் 'தேர்வுக்குத் தம்மைத் தயார் செய்துகொண்டிருந்த போதுதான் நாசா குறித்து அறிந்தார்.

இது குறித்து சௌரல் கூறியதாவது,

நாசா அறிவியல் கண்டுபிடிப்பாளர்களுக்கான தேர்வு குறித்து ஐ.ஐ.டி பொது நுழைவுத் தேர்வுக்குத் தயார் செய்துகொண்டிருந்தபோது தான் அறிந்தேன். விண்வெளிக்கலம் குறித்து அடிக்கடி நான் கனவு கண்டுகொண்டேயிருப்பேன்.என்றார் சௌரல்.

## தற்காலிக கணினிப் பயிற்சி போதனாசிரியர் பதவி

**மேற்படி பதவிக்கான நேர்முகத் தேர்வு 28.02.2005 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கிளி.வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறும்.**

* சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப் படிவம்.
* கல்வித் தகைமைச் சான்றிதழ்.
* தொழிற் தகைமைச் சான்றிதழ்.
* பிறப்புச் சான்றிதழ்.
* தேசிய அடையாள அட்டை.
* ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும்,கணினியில் Diploma in Microsoft, Office பயிற்சியும் முக்கிய தகைமையாகக் கருதப்படும்.
* ஏனைய ஆவணங்களின் மூலப் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

(சி-11443)

## குறிப்பு

## 2005.02.14 ஆம் திகதிய அரசாங்க கேள்வி அறிவித்தல் திருத்தம்

**பிறீமா கிறீன்மா கேள்வி என்பதற்கு பதிலாக மில் பிறாண்ட் மா விநியோகத்திற்கான கேள்வி கோரல் என திருத்தம் செய்யப்படல் வேண்டும். இத்திருத்தத்தினை ஏற்றுக்கொள்ளவும்.**

அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

(சி.11444)

இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

அம்மன் களஞ்சியம்
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ. பே:021-228 5852,5077

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!




அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)

# இந்தியாவுக்கான பாக். அணி அறிவிப்பு

## துணைத் தலைவராக யூனிஸ் நியமனம்



இந்தியப் பயணத்துக்கான 16 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இளம் வீரர்கள் அடங்கிய அணியின் துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து யூசப் யுகானா நீக்கப்பட்டு, யூனிஸ்கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று டெஸ்ட், ஆறு ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இம் மாத இறுதியில் இந்தியா செல்கிறது. இத்தொடருக்கான அணியை பாகிஸ்தான் கிரிக்கெட் தேர்வுக்குழு நேற்று முன்தினம் அறிவித்தது. துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து முன்னணி வீரர் யூசப் யுகனா நீக்கப்பட்டார். அவருக்குப் பதில் யூனிஸ்கான் புதிய துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மாற்றத்துக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. அடுத்த தலைவராக யூனிசை உருவாக்குவதற்கான திட்டம் என்று தேர்வுக்குழுவினர் தெரிவிக்கின்றனர். சமீபத்தில் அவுஸ்திரேலியப் பயணம் சென்ற அணியில் இடம்பெற்றிருந்த இம்ரான் பர்கத், முகமது ஆசிப் நீக்கப்பட்டனர். காயமடைந்திருந்த முகமது சமி, முகமது கலில் இருவரும் உடற் தகுதியை நிரூபித்து, அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இந்தியா சுழலுக்கு ஒத்துழைக்கும் என்பதால், டெனிஸ் கனேரியா தவிர, இரண்டாவது ஸ்பின்னராக 34 வயது அர்ஷாத் கான் இடம்பிடிக்கிறார். 8 டெஸ்ட்களில் 30 விக்கெட் வீழ்த்தியவர் இவர். இன்சமாம் யுகனா தவிர மற்றவர்கள் இளம் வீரர்களே அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களின் சராசரி வயது 26.5 ஆகும்.

அணி விபரம்:-இன்சமாம் உல்ஹக் (அணித் தலைவர்), யூனிஸ்கான் தாபிக்உமர், சல்மான்பட், யாசிர் ஹமீத், யூசப் யுகானா, ஆசிம் கமால், சோயப்மாலிக், கம்ரான் அக்மல் (விக்கெட்கீப்பர்), அர்ஷாத் கான், டேனிஷ் கனேரியா, அப்ரிதி, நவேத் உல்ஹசன், முகமதுசமி, முகமது கலில் மற்றும் அப்துல் ரசாக்.

## தப்பினார் ஹர்பஜன்சிங் பாக்.தொடரில் பங்கேற்பார்



பந்து வீச்சுப் புகாரில் இருந்து ஹர்பஜன் அனேகமாக தப்பி விட்டார். இவர் பாகிஸ்தான் தொடருக்கான இந்திய அணியில் இடம்பெறுவார் எனத் தெரிகிறது. வங்கதேசத்துக்கு எதிரான சிட்டகொங் டெஸ்ட் போட்டியின்போது ஹர்பஜன் பந்து வீச்சு குறித்து புகார் தெரிவிக்கப்பட்டது. இவர் தூஸ்ரா வகையில் வீசும்போது, அளவுக்கு அதிகமாக கையை வளைப்பதாகக் கூறப்பட்டது. இதையடுத்து மேற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தில் வைத்து நிபுணர்கள் குழு ஆய்வு செய்தது. இவர்களது அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்படாத போதும், சர்வதேச கிரிக்கெட் சபை விதிமுறைகளுக்கு உட்பட்டே ஹர்பஜன் பந்து வீச்சு இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே பாகிஸ்தான் தொடருக்கு தேர்வு செய்யப்பட இருந்த சிக்கல் நீங்கி விட்டது.

இது குறித்து ஐ.சி.சி செய்தித் தொடர்பாளர் ஜான்லாங் கூறுகையில், "இந்திய கிரிக்கெட் சபை முறைப்படி அறிக்கை அளிக்க வேண்டும்." இதற்கான கெடுவரும் 25 இல் முடிகிறது. அறிக்கை கிடைத்த பிறகே ஹர்பஜன் பந்துவீச்சுக் குறித்து எதுவும் சொல்ல முடியும் என்றார்.




ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு லண்டனில் உள்ள வெம்பிலே ஸ்டேடியத்தை வியாழக்கிழமை ஆய்வு செய் தார் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் மகளிர் நிர்வாகி நவால் எல் மௌட வேகே (வலது) 2012 ஒலிம்பிக் போட்டியை நடத்தப் போட்டியிடும் பல் வேறு நாடுகளில் லண்டன் முன்னிலை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் பயணத்தில் இருந்து ஏன் விலகினார் அக்தர்?




கடைசி நேரத்தில் இந்தியத் தொடரில் இருந்து சொஹைப் அக்தர் விலகிக் கொண்டது ஏன்..? புதிய, புதிய தகவல்கள் பாகிஸ்தானில் இருந்து வருகின்றன. இந்தியப் பயணம் வரும் பாகிஸ்தான் அணியிலிருந்து வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர் திடீரென விலகிக்கொண்டார். வியாழக்கிழமை அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அபராதம் விதித்தது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. அடுத்த நாளே விலகுவதாக அறிவித்தார் அக்தர். சும்மா பெயருக்கு காயம். குணமாகவில்லை' என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்.

ஆனால் உண்மைக் காரணம் அது இல்லையாம். "பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அக்தரை அவமானப்படுத்திவிட்டது. காயத்துடன் நாடு திரும்பியவரை விசாரணை, அபராதம் என்று அலைக்கழித்திருக்கக் கூடாது. அக்தர் விலகியதன் மூலம், இந்தியாவுக்கு வசதியாகப் போய்விட்டது. தொடர் துவங்கும் முன்பே நமது அணி தோற்றுவிட்டது." என்கிறார் பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சர்ப்ராஸ் நவாஸ்.

அவுஸ்திரேலியத் தொடரின்போது காயமடைந்த அக்தர், தொடர்ந்து அங்கேயே தங்கியிருந்து சிகிச்சை பெற விரும்பினார். ஆனால், அனுமதிக்கவில்லை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. உடனே நாடு திரும்பவேண்டும் என்று உத்தரவிட்டது. ஆறு நாள் தாமதமாகத் திரும்பினார் என்று ஒழுங்கு நடவடிக்கையும் எடுத்தது. இந்த விடயமும் அக்தரை அதிருப்தியடையச் செய்துவிட்டது "கிரிக்கெட் சபை. அணி நிர்வாகம் தலைவர் போன்றவர்கள் திறமையான வீரரை அனுசரித்துச் செல்லத் தவறிவிட்டனர் என்று குற்றம் சாட்டுகிறார் பாகிஸ்தான் முன்னணி கிரிக்கெட் விமர்சகர் வாகித்தான்.




## ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசை அவுஸ்திரேலிய அணி முதலிடம்




ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் அணிகளின் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அவுஸ்திரேலிய அணி (137 புள்ளிகள்) தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. நியூசிலாந்து (120 புள்ளிகள்) இரண்டாவது இடமும், சிறிலங்கா (117 புள்ளிகள்) மூன்றாவது இடமும், பாகிஸ்தான் (109 புள்ளிகள்) நான்காவது இடமும், தென்னாபிரிக்கா (106 புள்ளிகள்) ஐந்தாவது இடமும், மேற்கிந்தியத்தீவு (105 புள்ளிகள்) ஆறாவது இடமும், இங்கிலாந்து (103 புள்ளிகள்) ஏழாவது இடமும், இந்தியா (98 புள்ளிகள்) எட்டாவது இடமும், சிம்பாப்வே (51 புள்ளிகள்) ஒன்பதாவது இடமும், கென்யா (26 புள்ளிகள்) பத்தாவது இடமும் வகிக்கின்றன. வங்களாதேஷ் ( 11 புள்ளிகள்) கடைசி இடத்திலும் உள்ளது.

## அன்ருஸ்ரோசை இலக்கு வைக்கிறார் நட்சத்திரப் பந்து வீச்சாளர் மெக்ராத்

வரும் யூன் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ஆஷஸ் கிண்ண டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அன்ருஸ்ரோசை இலக்கு வைத்திருப்பதாக அவுஸ்திரேலியாவின் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் கிளன்மெக்ராத் தெரிவித்துள்ளார்.

மெக்ராத் வழமையாக எதிரணியின் சிறந்த வீரர்கள் மீது கண் வைப்பவராவார் இம்முறை அன்ருஸ்ரோஸ் மீது கண் வைத்துள்ளார். ஸ்ரோஸ் அநேகமான பாடசாலை மாணவர்களின் கனவுகளிலும், வாழ்ந்து வருபவர் அவர். கடந்த டெஸ்ட் போட்டிகளில் அபாரமான ஆரம்பத்தைத் தொடக்கினார். கடந்த மே மாதம் நியூசிலாந்துக்கெதிராக சதம் அடித்தார். பின்னர் தென்னாபிரிக்க அணிக்கெதிராகவும் சதங்களைப் பெற்றார். மைக்கல்வோன் அல்லது அன்ருஸ்ரோஸ் இருவருமே தனது இலக்காக இருப்பர் என மெக்ராத் தெரிவித்துள்ளார்.

## எனக்குப் பிடித்த வீரர் சச்சின் டென்னிஸ் வீராங்கனை மிர்ஷா

டென்னிஸ் ரேங்கிங் பட்டியலில் முதல் 50 இடங்களுக்குள் முன்னேறுவதே அடுத்த இலக்கு என்கிறார் இந்தியாவின் சானியா மிர்ஷா. அவுஸ்திரேலிய ஓபனில் அசத்திய சானியா, ஐதராபாத் ஓபனில் சம்பியன் பட்டம் வென்று சாதித்தார். இந்த ஆண்டின் இறுதிக்குள் முதல் 50 வீராங்கனைகளின் பட்டியலில் இடம் பெற முடியும் என நம்புகிறேன். இன்னொரு கிராண்ட்ஸ்லாம் போட்டிக்குத் தகுதி பெற முயற்சி மேற்கொண்டு வருகிறேன்.

இப்போதைக்கு கணுக்கால் காயம் காரணமாக ஓய்வில் இருக்கிறேன். வரும் 28 இல் தொடங்கும் டுபாய் ஓபன் போட்டிக்கு முன்பாகக் குணமடைந்து விட வாய்ப்புள்ளது. டென்னிஸ் பிரபலமடைந்து வருவது கிரிக்கெட்டைப் பாதிக்காது. இந்தியாவில் கிரிக்கெட் ஒரு மதம் போல பின்பற்றப்படுகிறது. நான் கூட நேரம் கிடைக்கும் போதெல்லாம் கிரிக்கெட். போட்டிகளை மிஸ் செய்வதில்லை. எனக்குப் பிடித்த வீரர் சச்சின் தான். இவ்வாறு சானியா கூறினார்.

## முன்னணி வீரர்கள் பங்கேற்கும் ஆசிய பில்லியர்ட்ஸ் புனேவில்

முன்னணி வீரர்கள் பங்கேற்கும் ஆசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் தொடர் புனேவில் நடைபெறுகிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான் தென் கொரியா, இலங்கை, தாய்லாந்து, மியான்மார் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றனர். இந்தியாவின் சார்பில் நடப்பு சம்பியனான தேவேந்திரா ஜோஷி, தேசிய சம்பியன் பங்கஜ் அத்வானி, கீர்சேத்தி, அசோக் சந்தில்யா, பாஸ்கர், சவுரவ் கோதரி மற்றும் ரிசப் தாகர் ஆகியோர் விளையாடவுள்ளனர். வரும் 26 இல் போட்டிகள் முடிவடைகின்றன. இதில் வெற்றி பெறும் வீரருக்கு ரூ.1.25 இலட்சமும் சம்பியன் கிண்ணமும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

## இந்திய விக்கெட் காப்பாளராக தினேஷ் கார்த்திக் இடம் பெறுவார்!

### ஜோன் ரைட்




பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் விக்கெட் கீப்பர் வாய்ப்பை தமிழகத்தின் தினேஷ் கார்த்திக் பெறக் கூடும் . இதனை இந்தியப் பயிற்சியாளர் ஜான் ரைட் சூசகமாகத் தெரிவித்தார்.


இந்திய அணியின் தேர்வு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து லக்னோவில் ரைட் கூறியதாவது,

அணியில் இடம் பிடிக்க விக்கெட்கீப்பர்களுக்கு இடையே கடும் போட்டி காணப்படுகிறது. உள்ளூர் போட்டிகளில் தினேஷ் கார்த்திக், தோனி, பார்த்திவ் படேல் என மூவருமே தங்களது திறமையை நிரூபித்துள்ளனர். ஆனாலும் வங்கதேஷத்துடனான போட்டியில் சிறப்பாக செயற்பட்ட கார்த்திக், பாகிஸ்தான் தொடரிலும் வாய்ப்புப் பெறக்கூடும். பதான், அகார்க்கர், பாலாஜி போன்றோர் உடல் தகுதியை நிரூபிக்க வேண்டும்.

பாகிஸ்தான் தொடரில் பெரும் சவால் காத்திருக்கிறது. நமது ரசிகர்கள் விரும்பும் முடிவை தரக் காத்திருக்கிறோம். இத்தொடரில் ஆடுகளம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நானோ அல்லது கங்குலியோ வலியுறுத்தவில்லை. டெஸ்ட் தரத்தில் இருந்தால் போதுமானது.

சச்சின் ஆட்டத்தில் எவ்வித மந்த நிலையும் ஏற்படவில்லை. மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். காயத்தால் அவதிப்பட்ட போதும் இவரிடம் கிரிக்கெட் மீதான காதல் குறையவில்லை.நீண்ட நாட்கள் விளையாடி இன்னும் அதிகமான சாதனைகள் படைப்பார். இவ்வாறு ரைட் கூறினார்.

## சிந்தனைக்கு



நாம் அரசியல் வாதிகளல்லர்;
நாம் புரட்சி வாதிகள்

தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 21-02-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சகிக்க முடியாத நிலையில்!

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் பொருட்களுக்கு சுங்கத் தீர்வை விதிப்பது என்ற அரசாங்கத்தின் முடிவானது முற்றிலுமாக மனிதநேயமற்ற செயல் என்பது மட்டுமல்ல, இனரீதியான ஒடுக்குமுறை நோக்கத்தினையும் கொண்டதாகும்.

நிவாரணம் என்ற ரீதியில் வழங்கப்படும் பொருட்களுக்கு வரி விதிப்பதென்பது ஆசிய மனித உரிமை அமைப்பின் பணிப்பாளர் பசில் பெர்னாண்டோ கூறியது போன்று பாரதூரமானதே. ஏனெனில் இப்பொருட்கள் வழங்குபவர்களும் சரி, பெற்றுக் கொள்பவர்களும் சரி இதற்கான வரியைச் செலுத்தக் கூடியவர்களாக இருப்பதற்கு வாய்ப்புள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். அவ்வாறு இல்லாது சிலர் சில அமைப்புக்கள் வரி செலுத்தக் கூடியவையாக இருப்பினும் அவர்களின் உயரிய நோக்கத்திற்கு இது இடையூறானதாகும்.

அதாவது வெளிநாடுகளில் இருந்து நிவாரணப் பொருட்களை அனுப்புபவர்கள் அவற்றைப் பலரிடம் இருந்து சேகரித்தோ அன்றிப் பலரிடம் சேகரித்த பணத்தில் இருந்து கொள்வனவு செய்தோ அனுப்புகின்றனர். இவர்கள் தாம் அனுப்பும் பொருட்களுக்கு வரியும் அனுப்புதல் வேண்டும் எனக் கூறுவது நிவாரண உதவி வழங்குவோரைச் வேதனைக்குள்ளாக்கும் செயலாகும்.

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவாரணப் பொருட்களுக்கான வரிகளைச் செலுத்தக் கூடியவையாக இருக்கலாம். ஆயினும் அவர்களும் தமக்கென ஒதுக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியை இத்தகைய செலவீடுகள் மூலம் இழக்க வேண்டி வருவதனால் அவர்களின் நிவாரணப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் திரும்பி விட வாய்ப்புண்டு.

அரசாங்கத்தின் இத்திடீர் அறிவிப்பால் பொதுவில் அரச சார்பற்ற நிறுவனங்களே பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. எடுத்துக்காட்டாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கென வந்த நிவாரணப் பொருட்கள் 50 கொள்கலன்களில் கொழும்புத் துறை முகத்தில் தேங்கிக் கிடப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறு சுங்க வரியை அறிவித்தமையானது நிச்சயமாக அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கானதே என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. ஆனால் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டைக்கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முதல் நடவடிக்கையல்ல இது. சுனாமியால் பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் – குறிப்பாக, கிழக்கில் அரச செயலணிக்குழுக்கள் ஊடாகவே நிவாரணங்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதும், நலன்புரி நிலையங்களை இராணுவ அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் அரசாங்கம் கொண்டு வந்துள்ளமையும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்திய வங்கியூடாகவே இனி நிதி கையாள வேண்டும் எனக் கடந்த வாரத்தில் கொண்டுவந்த தீர்மானமும் இதன் அடிப்படையிலானதேயாகும்.

அரசாங்கம் இவ்வாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது சீற்றத்தை வெளிப்படுத்துவதற்கும் காரணம் இல்லாமலில்லை. சுனாமி அனர்த்தத்தை அடுத்து அரசாங்கம் செயலற்ற நிலையில் இருந்தபோது உடன் செயற்பட்டவை அரச சார்பற்ற நிறுவனங்களே. இதன் காரணமாக அரசாங்கத்தின் செயற்றிறன் பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியும் இருந்தது. இதேவேளை, அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரும் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டன. இது அரசிற்குச் சீற்றத்தைக் கொடுத்திருக்கலாம்.

அடுத்ததாக, அரசசார்பற்ற நிறுவனங்களின் பணிகளில் குறிப்பிடத்தக்கவை வடக்கு–கிழக்கிலும் மேற்கொள்ளப்படுபவைகளாகின. அத்தோடு, தமிழ் மக்களும் இதில் பயன் அடைகின்றனர். இந்நிலையானது சிங்கள ஆட்சியாளர்களுக்கு சகித்துக் கொள்ள முடியாததொன்று. அரசாங்கத்திற்கு நிவாரணப் பொருட்கள் பெரியளவில் கிடைக்கப்பெற்றபோதும் தமிழர் தாயகப் பகுதிக்கு அவற்றில் சிறிதளவுதானும் அரசாங்கத்தால் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இந்நிலையில், அரச சார்பற்ற நிறுவனங்கள் பகிர்ந்தளித்தமை அரசாங்கத்திற்குப் பெரும் அசெளகரியத்தைக் கொடுத்திருத்தல் வேண்டும்.

அதிலும் குறிப்பாகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் பெரும் எடுப்பிலான நிவாரணப் பொருட்கள் விநியோகம் செய்தமையும் அதன் துரித நடவடிக்கையைப் பலரும், ஐ.நா. செயலாளர் கொபி அனான் உட்பட பல தரப்பாலும் பாராட்டப்பட்டமையும் அரசாங்கத்திற்கு விருப்பத்திற்குரியதொன்றாக இருக்க வாய்ப்பில்லை.

இந்நிலையில்தான், அரச சார்பற்ற நிறுவனங்களின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. அரசாங்கத்தின் இச்செயலானது பொதுவில் அரச சார் பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டிற்கு முட்டுக்கட்டை போடுவது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் பெரியளவில் சென்று சேருவதைத் தடை செய்யும் இனவாத நோக்கம் கொண்ட தாகும்.

# அரசாங்கம் தேவையான சமயத்தில் அவசரகாலச் சட்டத்தை பிரகடனம் செய்யவில்லை

## ரணில் விக்கிரமசிங்க குற்றச் சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் தேவையான சமயத்தில் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டி யுள்ளார்.

இதேவேளை சுனாமிப்பேரலை தாக்கி இருபத்தாறாம் திகதி அன்றே அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஹங்குராங் கொடதொகுதி அமைப்பாளர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறுகையில், அவசர காலச் சட்டம் பெப்ரவரி மாதத்தில் கொண்டுவரப்பட்டது. இந்த நேரத்தில் தேசிய மட்டத்திலான ஒன்றை அமைத்து சுனாமி செயற்றிட்டங்களை முன்னெடுத்திருக்கலாம். சுனாமிக்கு அவசர காலச் சட்டம் தேவையாயின் அது குறித்து அங்கு தேசியக் குழுக் கூட்டத்தில் பேச்சு வார்த்தைகளை நடத்தியிருக்கலாம். இந் தச் சுனாமிச்சட்டம் தேசியக் கொமிற் றிக்குக் கொண்டு வரப் படவில்லை.

அவசர காலச் சட்டம் குறித்து அன்றைய கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே அரசாங்கத்தின் சிலர் அறிந்து கொண்டனர். அவசர காலச் சட்டம் செயற்படுத் தப்பட்ட போதும் அனர்த்த நேரத் திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வில்லை.

தேசிய பாதுகாப்பிற்காக உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கலாம். சுனாமி வந்ததனால் யுத்தமொன்று இந்த நாட்டில் ஏற்படவில்லை எனவும், தேசியப் பாதுகாப்பை அங்கு பிரயோகிக்க வேண்டிய தேவை இருக்கவில்லையெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தென் ஆபிரிக்க பா.உ கள் கூட்டமைப்பினரைச் சந்திப்பார்

தென்னாபிரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் ஆலோசகர்கள் அடங்கிய குழுவினரை தமிழ்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று சந்திக்கவுள்ளனர்.

கொழும்பில் நடைபெறும் இச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

தென்னாபிரிக்காவிலிருந்து இலங்கை வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் ஆலோசகர்கள் அடங்கிய குழுவினர் சனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைச் சந்திப்பதுடன் கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர்.

## புலிகளுடன் இணைந்து நிவாரண நடவடிக்கையா? கடும் நடவடிக்கை எடுக்க ஜே.வி.பி தீர்மானம்

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள வட-கிழக்கு பகுதிகளை புனரமைப்பதற்கு அரசாங்கம், விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டால் அதற்கு எதிராகக் கடுமையான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதென ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து வட-கிழக்கை மீளக் கட்டியெழுப்பப் போவதாகக் கடந்த வாரம் ஜப்பானிலிருந்து இலங் கைக்கு வருகை தந்துள்ள யசூசி அகாஷியிடம் சனாதிபதி தெரிவித் திருந்தார்.

இது சம்பந்தமாக ஜே.வி.பியை இணைத்துக் கொள்வதற்குத் தற்பொழுது சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இது தொடர்பில் ஜே.வி.பியினர் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

## சுனாமி அனர்த்தத்தில் 2862 சிறுவர்கள் பெற்றோர்களை இழந்துள்ளனர்

தமிழர் தாயகப் பகுதிகளில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் 2,862 சிறுவர்கள் பெற்றோர்களை இழந்திருப்பதாக வடக்கு கிழக்கு மாகாண சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 2,125 பேர் தாய் அல்லது தந்தையை இழந்துள்ளார்கள். 737 பேர் இருவரையும் இழந்துள்ளார்கள். தாய் அல்லது தந்தையை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை அம்பாறை மாவட்டத்திலேயே அதிகமாக உள்ளது. மாவட்ட ரீதியான விபரங்கள் வருமாறு:

அம்பாறை மாவட்டம் - 954 மட்டக்களப்பு மாவட்டம் - 699 முல்லைத்தீவு மாவட்டம் - 393 யாழ். மாவட்டம் - 47 திருகோணமலை மாவட்டம் 32 என இந்த எண்ணிக்கை 2,125 ஆகும். தாயையும், தந்தையையும் இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகமாகவுள்ளது. அதாவது இம் மாவட்டத்தில் பெற்றோர் இருவரையும் இழந்தோர் எண்ணிக்கை 406 ஆகும். ஏனைய மாவட்ட விபரங்கள் வருமாறு: அம்பாறை மாவட்டம் - 162 திருகோணமலை மாவட்டம் - 35 முல்லைத்தீவு மாவட்டம் - 94 யாழ். மாவட்டம் - 39 கிளிநொச்சி மாவட்டம் - 01 என இந்தத் தொகை 737 ஆகும்.

## கேகாலையில் குண்டு வெடிப்பு யுவதி பலி; இளைஞர் படுகாயம்

கேகாலை, ஹரிவடுன்னப் பகுதியிலுள்ள வீடொன்றில் சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் யுவதியொருவர் உயிரிழந்திருப்பதுடன், இளைஞரொருவர் பலத்த காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது; இக்குண்டு வெடிப்பினால் சந்திமாநிலந்தி பெரரோ என்ற யுவதி உயிரிழந்துள்ளார். மஹிந்த குமாரஜயதிலக என்ற இளைஞர் படுகாயமடைந்துள்ளார். இது ஒரு தற்கொலை முயற்சியாக இருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் குறித்த யுவதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இளைஞர் பலத்த காயங் களுடன் ஆபத்தான நிலையில் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதேவேளை இச்சம்பவம் குறித்து பல ஊகங்களும், சந்தேகங்களும் தெரிவிக்கப்படுவதாகக் கூறும் கேகாலைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கபில செனவிரத்ன இது குறித்து மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## இலங்கைக் கடற்பரப்பில் நீர் மட்டம் ஒரு மீற்றரால் உயர்ந்தது

இலங்கை கடற்பரப்பில் முன்னரை விடத் தற்பொழுது நீர்மட்டம் ஒரு மீற்றர் அளவுக்கு உயர்ந்துள்ளதென காலநிலை அவதான நிலையப் பணிப்பாளர் ஜீ.எச்.பீ. தர்மரத்ன தெரிவித்துள்ளார். பல வருடங்களுக்குப் பின் மாலைதீவு கடற்பரப்பில் நீர்மட்டம் அதிகரித்து மாலைதீவின் பல தீவுகள் முற்றாக அழிந்துவிடும் எனவும் அதன் பலனாக இலங்கைக் கடற்பரப்பில் நீர்மட்டம் அதிகரிக்கப்படும் எனக் காலநிலை அவதான நிலையப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் 40 வீதமான இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமை

## -சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நூற்றிற்கு நாற்பது வீதமான இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிட்டிகம வடக்கில் பௌத்த பாளி பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவை முன்னிட்டு இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில், நாட்டின் பொருளாதாரம் உலகத்திற்காகத் திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நிலை தோன்றியதெனவும் கூறிய அவர்,

போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துமுகமாக சட்டத்தினதும், பொலிசாரினதும் செயற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

சிறிய வயது முதலே இவர்களுக்கு மார்க்கப்பற்றைக் கற்பிக்காவிட்டால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

# அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை நீடிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தினரால் இடம்பெயர் நடமாடும் சேவை மூலம் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் இன்று மதியம் வரை மூன்று பிரதேச செயலகங்களில் நடைபெறவுள்ளதென கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மேற்படி திணைக்களத்தினரால் நேற்று முன்தினமும், நேற்றும் கிளிநொச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகங்களில் வைத்து தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொளப் பெற்றது. மேலும் பல அடையாள அட்டை பெறுவதற்கு வருகை தந்துள்ளமையின் காரணமாக மேற்படி நடமாடும் சேவை இன்று காலை 7.00 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை கரைச்சி, கண்டவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களில் நடைபெறவுள்ளதெனவும், எனவே மேற்படி தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் இன்றைய தினம் குறிப்பிட்ட பிரதேச செயலகங்களுக்குச் சென்று தங்கள் விண்ணப்பப்படிவங்களைக் கையளிக்கும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி. சுலோஜினி வேண்டியுள்ளார். (சோ)

# புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவில் மாதாந்த வீரமுரசு கலை நிகழ்வு



படங்கள்:-தவரட்ணம்

சமகால அரசியல் நிலைப்பாட்டினைத் தாங்கி வரும் மாதாந்த வீரமுரசு கலை நிகழ்வு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்புப் பிரதேச மல்லிகைத் தீவு வலயத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றது. இந் நிகழ்வானது மல்லிகைத்தீவு ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் மைக்கல் தியாகராஜா தலைமையில் இரவு 7.00 மணிக்கு ஆரம்பமானது. இந் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை ஆனந்தபுரம் கிருஸ்ணர் ஆலயக் குருக்கள் இராமசாமி அவர்களும், மல்லிகைத்தீவு கிராம அலுவலர் கந்தசுவாமி அவர்களும் ஏற்றி வைத்ததினைத் தொடர்ந்து மல்லிகைத்தீவு வலயத்திற்குட்பட்ட 22 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர்மாலை அணி விக்கப்பட்டது.

பாரதி இல்ல மாணவிகளின் வரவேற்பு நடனத்தினைத் தொடர்ந்து கருத்துரையினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினரும்,சட்டவாளருமான அற்புதராஜா ஆகியோர் நிகழ்த்தியதைத் தொடர்ந்து சிறப்புரையினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் நிகழ்த்தினார். தொடர்ந்து பாரதி இல்ல மாணவர்களினதும், நுண்கலைக் கல்லூரி மாணவர்களினதும், ஆனந்தபுரம் பாடசாலை மாணவர்களினதும், மல்லிகைத்தீவு இரவு நேர வகுப்பு மாணவர்களினதும், நடனம், கவிதை மற்றும் வினாடிவினாப் போட்டியும், மல்லிகைத்தீவு ஞான ஒலி இரவு வகுப்பு மாணவர்களின் திருந்திய உள்ளங்கள் எனும் நாடகமும் இடம்பெற்றுள்ளது. (08)

# அவுஸ்திரேலிய இரசாயனவியல் புதிர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



(படம் ஆறு சுபாஸ்கரன்)

இலங்கை இராசாயனவியல் மன்றம் 31.07.2004 அன்று நடாத்திய தேசிய அவுஸ்திரேலிய இரசாயனவியல் புதிர் போட்டியில் மிகத் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவித்துள்ளது.

வித்தியா மந்திரவில் அண்மையில் நடைபெற்ற இக் கௌரவிப்பு நிகழ்வில் 105 மாணவர்களுக்கு புலமைப் பரிசீலுடனான கேடயமும், சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இதில் வடமாகாணத்தில் திறமைச் சித்தி பெற்ற இருவரில் ஒருவரான செல்வன், முத்துலிங்கம்-தனுசன் அவர்களுக்கு பேராசிரியர் J.W.O பெர்னாண்டோ பரிசளித்துக் கௌரவிப்பதனைப் படத்தில் காணலாம் இவர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய உயர் தர வகுப்பு மாணவராவார்

# திருக்கேதீஸ்வரம் விடத்தல்தீவு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்க ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)

திருக்கேதீஸ்வரம்,விடத்தல் தீவு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருக்கேதீஸ்வரம், விடத்தல்தீவு ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்குத் தேவையான குடிநீரை விநியோகிப்பதற்காக இரு நீர்த்தாங்கிகள் அமைக்கப்படுவதாக திட்டப் பொறியியலாளர் தி.மகேஸ்வரராஜா தெரிவித்துள்ளார்.

நீர்ப்பின் நிதியுதவியில் திருக்கேதீஸ்வரம் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக 27 மில்லியன் ரூபா செலவிலும் , விடத்தல் தீவு பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக 32 மில்லியன் ரூபா செலவிலும் இரு நீர்த்தாங்கிகள் அமைக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக்குடிநீர் விநியோகத் திட்டத்தினால் ஏறத்தாழ 600 குடும்பங்கள் பயனடையவுள்ளன. (10)

### "பெண்கள் உரிமை"

**கருத்தரங்கு**

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் பெண்கள் அமைப்பினர் நடத்தும் "பெண்களின் உரிமை" என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்கியூடெக் நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கு மேற்படி கியூடெக் நிறுவன அங்கத்தவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது.(33)

## வெடிமருந்து....

சமயம் கட்டாயப்படுத்தித் திணித்ததாகவும் இந்தச் சம்பவம் தொடர்பாக வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக இரத்த வாந்தியெடுத்து மயக்கம் போட்ட இராணுவச் சிப்பாய்கள் நேற்று முன்தினமிரவு வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தற்போது அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பயிற்சி வழங்கிய இராணுவ அதிகாரி இந்தச் சம்பவத்தையடுத்து தலைமறைவாகியுள்ளார். மேற்படி விடயம் தொடர்பாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்காவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இப்படியொரு சம்பவம் இடம்பெற்றுள்ளதை அவர் உறுதிப்படுத்தினார். குறிப்பிட்ட சிப்பாய்களின் உடலினுள் சி-4 ரக வெடிமருந்து உட்சென்றிருக்கின்றது. இதனை சுவாசித்ததால் ஏற்பட்டிருக்கலாம். அல்லது இதனைக் கையாண்ட பின்பு கைகளை நன்கு கழுவாமல் உணவு அருந்தியமையினால் ஏற்பட்டிருக்கலாம். இருப்பினும் இது தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன என்றார். இதற்கிடையில் இந்த இராணுவச் சிப்பாய்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. செய்தியாளரொருவர் அங்கு நின்ற இராணுவ அதிகாரியொருவரினால் தடுக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார். வன்னிப் பத்திரிகையாளர் சங்கம் இது தொடர்பாகத் தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளதோடு இது பற்றி விசாரணை நடத்துமாறு இராணுவத் தளபதியைக் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

## அமெரிக்க....

இன்று காலை மாத்தறைப் பகுதிக்குச் செல்லவுள்ள இவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்விருவரும் இன்று மாலை இலங்கையில் இருந்து மாலைதீவிற்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கையடக்க...

வந்துள்ளனர். முன்னாள் அமெரிகக சனாதிபதிகளான ஜோர்ஜ்புஷ், பில் கிளின்டன் ஆகியோரின் இலங்கைப் பயணம் தொடர்பிலான செய்திகளை வெளியிட இவற்றை எடுத்து வந்திருக்கலாமென்று கருதப்படுகிறது. இது தொடர்பாக சுங்கத் திணைக்களத் தலைவரிடம் வினாவியபோது இவ்வகையான தொலைபேசிகளை அனுமதியின்றி இலங்கைக்குள் எடுத்து வரமுடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

## 3 ஆண்டு....

ஏற்படுத் தும் வகையில் கடந்த காலங்களில் சிறிலங்கா இராணுவத்தரப்பு செயற்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் சிறிலங்கா அரசுடன் இருக்கும் ஆயுதக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் சிறிலங்கா அரசு இக்காலப் பகுதியில் புதிய குழுக்களை இணைத்து அவர்களுக்கும் ஆயுதம் வழங்கும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டதெனத் தெரிவித்துள்ளார். எனவே, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களுக்கு மாறாகவே சிறிலங்கா அரசு கடந்த மூன்று ஆண்டுகளும் செயற்பட்டுள்ளமையால் இவ் ஒப்பந்தம் முறிவடையும் சாத்தியம் அதிகமாக இருப்பதாகக் கூறியுள்ளார்.


**யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் பணிமனை**

தமிழர் தாயகத்தின் தேசிய நாளிதழான ஈழநாதம் – அதன் புதிய பணிமனையினை யாழ்ப்பாணத்தில் பழைய இடத்தில் மீண்டும் திறந்துள்ளது என்பதனை எமது வாசகர்கள் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

உங்கள் தொடர்புகளுக்கு } இல: 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி, தொலைநகல்: 021-2227917


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது